

# தொலை நோக்கு

பௌத்த கலாசார பண்புகளைப் பேணுகின்ற ஒழுக்க மேம்பாடுடையதோர் சமூகம்

# பணிக்கூற்று

சம்புத்த சாசனத்தின் நிலையுறுதி வளர்ச்சி மற்றும் செயற்பாடுகளை சிறப்பாக ஒழுங்குபடுத்துவதன் மூலமாக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பௌத்த மக்களிடையே புத்துணர்ச்சியை ஏற்படுத்தும் ஒழுக்க மேம்பாடுடைய சமூகமொன்றை தோற்றுவித்து முன்மாதிரியானதொரு பௌத்த சமூகத்தை தோற்றுவித்தல்.

# நோக்கம்

- தேரவாத பௌத்த தர்மத்தை பாதுகாத்தல் போஷித்தல் மற்றும் பரப்புதல்
- பௌத்த தர்ம உடமைகளை பாதுகாத்தல் பராமரித்தல் மற்றும் அவற்றை பௌத்தசாசனத்தின் வளர்ச்சிக்கு வேண்டி ஈடுபடுத்தல்
- பௌத்த கலாசாரத்தை போற்றிப் பின்பற்றும் முன்மாதிரியானதொரு சமூகத்தை தோற்றுவித்தல்
- பண்டு தொட்டு பௌத்தசாசனத்துடன் தொடர்புடைய விடயங்களையும் கருத்துகளையும் காலத்தின் தேவைக்கேறப் பயன்படுத்துதல் போஷித்தல் மற்றும் வளர்த்தல்.
- பௌத்த இலக்கியம் மற்றும் கலைகளை பாதுகாத்தலும் போஷித்தலும் வளர்த்தலும்.
- நவீன தொழிநுட்ப யுகத்திற்கு ஏற்ற வகையில் பௌத்த தர்மத்துடன் இணைந்ததான பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பும் வகையில் பௌத்த மக்களை ஒழுங்கு செய்து வழிநடாத்துதல்.

# பொருளடக்கம்


தொலை நோக்கு, பணிக்கூற்று மற்றும் நோக்கம் I

பௌத்த மத அலுவல்கள் ஆணையாளர் நாயகத்தின் செய்தி IV

அறிமுகம் V

பௌத்த மத அலுவல்கள் திணைக்களத்தின் கட்டமைப்பு VI

திணைக்களத்தில் அனுமதிக்கப்பட்ட உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை மற்றும் கடமையாற்றும் உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை VIII

01) **நிர்வாகப் பிரிவு** **10 - 12**

01.1 2018 இல் நிர்வாகப் பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட விசேட பணிகள்

02) **விகாரைகள் அறக்கட்டளை நிலையங்கள் பிரிவு** **13 - 16**

02.1 விகாரைகளைப் பதிவு செய்தல்

02.2 விகாரைகள் மற்றும் தேவஸ்தானங்களுக்கு சொந்தமான காணிகளை குத்தகைக்கு வழங்குதல்

02.3 அமரத்துவம எய்திய பிக்குமார்களின் வங்கிக் கணக்கு நிதிகளை விடுவித்தல்

02.4 விகாரைகள் மற்றும் தேவஸ்தானங்களுக்கு சொந்தமான காணிகளில் உள்ள மரங்களை வெட்டுவதற்கும் விற்பனை செய்வதற்குமான அனுமதி பெற்றுக்கொடுத்தல்.

02.5 நன்கொடை உறுதிப் பத்திரங்களுக்கான சிபாரிசுகளைப் பெற்றுக்கொடுத்தல்

02.6 பிக்குமார்களினால் தனிப்பட்ட ரீதியில் கொள்வனவு செய்யப்பட்ட உடைமைகள் விகாரைகளுக்கு சொந்தமில்லை என்பதை தெரியப்படுத்தல்

02.7 ஆரண்ய சேனாசனைகளை நிறுவுவதற்கான அனுமதியை பெற்றுக்கொடுத்தல்

02.8 தேவஸ்தானங்களுக்கான பொறுப்பாளர்களை நியமித்தல் மற்றும் தேவஸ்தானங்கள் தொடர்பான பணிகள்

03) **அறநெறிப் பாடசாலைகள் பிரிவு** **17 - 24**

03.1 அறநெறிப் பாடசாலைகளை பதிவு செய்தல்

03.2 அறநெறிப் பாடசாலைகளுக்கான பரீட்சை நடாத்துதல்.

03.3 அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களினதும் மாணவர்களினதும் தகவல்களை சேகரித்தல் மற்றும் அவற்றை தரவேற்றம் செய்தல்.

03.4 123ஆவது அறநெறிப ்பாடசாலை தினத்தை கொண்டாடுதல்.

03.5 ஆசிரியர்களுக்கான சீருடை மற்றும் கொடுப்பனவுகளை வழங்குதல்.

03.6 அறநெறிப்பாடசாலை ஆசிரியர்களுக்கு சான்றிதழ்கள் வழங்குவதற்கான பரீட்சைகளை நடாத்துதல்.

03.7 அறநெறிப் பாடசாலை மாணவர்களின் ஆற்றல்களை கணிப்பீடுகளை செய்தல்.

03.8 அறநெறிப் பாடசாலைகளுக்கான நூல்களை அச்சிடுதல்.

03.9 புத்த ஜயந்தி நூலகம்

04) **அபிவிருத்திப் பிரிவு** **25 - 38**

04.1 சில்மாதாக்கள் தொடர்பான பணிகள்

04.2 பௌத்த கலைஞர்களையும் அறிஞர்களையும் கௌரவித்தல்.

04.3 அறநெறிப் பாடசாலைகளுக்கு தேவையான வசதிகளைப் பெற்றுக்கொடுத்தல்.

04.4 விகாரைகளின் நிர்வாக சபைகளையும் சாசனப் பாதுகாப்பு சபைகளையும் பதிவு செய்தல்

04.5 சாசனப் பாதுகாப்புச் சபைகளின் செயற்பாடுகளை ஊக்குவித்தல்

04.6 தேசிய உற்சவங்களை ஒழுங்கு செய்தல்

04.7 உபசம்பதா உற்சவங்களை ஒழுங்கு செய்தல்

04.8 பிக்குமார்களின் ஈமைச் சடங்குகளுக்கான செலவுகளை மேற்கொள்ளுதல்

04.9 சிவுபசவுக்கான நிதியுதவி வழங்குதல்.

04.10 சலுகைக் கட்டண அடிப்படையில் விகாரைகளுக்கு தொலைபேசி, மின்சாரம், நீர் வசதியினைப் பெற்றுக்கொடுத்தல்

05) **கருத்திட்டப் பிரிவு** **39 - 43**

05.1 அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களின் ஆற்றல்களை அபிவிருத்தி செய்யும் நிகழ்ச்சித்திட்டங்கள்.

06) **பிக்குமார்களைப் பதிவு செய்யும் பிரிவு** **44 - 45**
06.1 சாமனேர உபசம்பதா சான்றிதழ்களை வழங்குதல் மற்றும் பிக்குமார்களுக்கான அடையாள அட்டைகளை வழங்குதல்.

07) **தகவல் பிரிவு** **46 - 49**
07.1 தகவல் அறியும் உரிமை தொடர்பான கட்டளைச்சட்டம்
07.2 விகாரைகள் தொடர்பான தகவல்களை கனணிமயப்படுத்தல்
07.3 விகாரைகள் தொடர்பான தகவல்களை அன்றாடம் பதிவேற்றம் செய்தல்.
07.4 பாளி மொழி மேம்பாட்டு பாடத்திட்டம்
07.5 பிக்குமார்களுக்கான பயிற்சிகளை வழங்கும் நிகழ்ச்சித்திட்டங்கள்.
07.6 ஊடக செயற்பாடுகள்.
07.7 ஆன்றாட பத்திரிகை செய்திகளை சேகரித்தல்

08) **கணக்கியல் பிரிவு** **50 - 52**

09) **உள்ளக கணக்காய்வுப் பிரிவு** **53 - 54**

10) **பௌத்த மத அலுவல்கள் தொடர்பான திணைக்களத்தின் பிராந்திய அலுவலகங்கள்** **55 - 64**
10.1 இரத்தினபுரி பிராந்திய அலுவலகம்
10.2 கண்டி பிராந்திய அலுவலகம்

# பௌத்த மத ஆணையாளர் நாயகம் அவர்களின் செய்தி



இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் அரசியல் யாப்பிற்கு அமைய புத்தசாசனத்தைப் பாதுகாத்தல், போஷித்தல், பிரசாரம் செய்தல் மற்றும் விருத்தி செய்தல் என்னும் பாரிய அரச கடமையானது புத்தசாசன அமைச்சின் கீழ் இயங்கும் பௌத்த மத அலுவல்கள் திணைக்களத்திடம் வழங்கப்பட்டுள்ளது. இப்பாரிய பொறுப்பினை நிறைவேற்றும் பொருட்டு அனைத்து சந்தர்ப்பங்களிலும் சிறந்த தொலை நோக்குப் பார்வையுடன் பௌத்த மத அலுவல்கள் திணைக்களமானது செயற்படுவது மகிழ்ச்சிக்குரிய விடயமாகும்.

எமது தொலைநோக்கானது பௌத்த பண்பாட்டினைப் பேணும் சமூகமொன்றைக் கட்டியெழுப்புவதாகும். இந்நோக்கத்தை அடையும் பொருட்டு பலதரப்பட்ட பணிகளும், நிகழ்ச்சித் திட்டங்களும் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. ஒரு நாடு அபிவிருத்தியடையும் போது சமூக, பொருளாதார மற்றும் பௌதீக வளர்ச்சிக்கு ஏற்ப நாட்டு மக்களிடையே நற்பண்புகள் விருத்தியடையாவிடின் பூரண அபிவிருத்தியை எதிர்பார்க்க முடியாது. எனவே இத்திணைக்களத்தினால் முன்னெடுக்கப்படும் செயற்பாடுகள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.


இந்த நற்பண்புகளை மேம்படுத்துவதன் பொருட்டு கிராமத்திற்கும், விகாரைக்கும் இடையேயான உறவை பலப்படுத்துவதன் மூலம் அறநெறிக் கல்வியை மேம்படுத்துதல், மதுபானம் மற்றும் புகைப்பழக்கத்தை இல்லாதொழித்தல், ஒழுக்க மேம்பாட்டுடன் பௌத்த அறக் கல்வியினை போதிப்பதன் பொருட்டு அர்ப்பணிப்புடன் செயற்படுவது எமது பிரதான பணியாகும்.

விகாரைகள், அறக்கட்டளை நிலையங்கள் கட்டளைச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட அன்றாட பணிகளை தாமதமின்றி நிறைவேற்றுதல், அறநெறிப்பாடசாலைகள் அபிவிருத்தி, கருத்திட்ட, தகவல், நிர்வாகம், கணக்கியல், உள்ளகக் கணக்காய்வு மற்றும் பிக்குமார்களை பதிவு செய்தல் போன்ற பிரிவுகளின் செயற்பாடுகளை மிகவும் திறமையாகவும், பயனுள்ளதாகவும், மிகவும் சிறந்த முறையில் நிறைவேற்றுவதன் பொருட்டு அர்ப்பணிப்புடன் செயலாற்றிய பிரிவுப் பொறுப்பாளர்கள் மற்றும் அனைத்து உத்தியோகத்தர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**சுனந்த காரியப்பெரும**
பௌத்த மத ஆணையாளர் நாயகம்.

# அறிமுகம்

பௌத்த மத அலுவல்கள் திணைக்களமானது பிரதானமாக சம்புத்த சாசனத்தின் நிலையிறுதியின் பொருட்டும் சமயப் பண்புகளைப் பேணும் பௌத்த சமூகமொன்றை கட்டியெழுப்புவதற்கு காலத்தின் தேவைக்கேற்ப கருத்திட்டங்கள் பலவற்றை செயற்படுத்துவதுடன் 1931 இல் 19 ஆம் இலக்க விகாரைகள் அறக்கட்டளை நிலையங்களுக்கான கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் பௌத்த மத அலுவல்கள் ஆணையாளர் நாயகத்திற்கு வழங்கப்பட்டுள்ள பொறுப்புக்களான பௌத்த வழிபாட்டுத் தலங்களையும் உடமைகளையும் சம்புத்தசாசனத்தின் நிலையுறுதிக்கு வேண்டி ஈடுபடுத்துவதற்கு தேவையான நிர்வாக ரீதியிலான ஒத்துழைப்புக்களை பெற்றுக்கொடுத்தல் விகாரைகளை அபிவிருத்தி செய்தல் அறநெறிப் பாடசாலைகளில் கல்வித்தரத்தை மேம்படுத்தல் மற்றும் நாட்டின் அனைத்து சாமனேர, உபசம்பதா பிக்குமார்களைப் பதிவு செய்து தகவல்களைப் பாதுகாத்தல் போன்றன மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.




இப்பணிகளை நிறைவேற்றுவதன் பொருட்டு பௌத்தமத அலுவல்கள் திணைக்களத்தில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகள் காணப்படுவதுடன் அவற்றுக்கான பொறுப்புக்களும் குறிப்பிடப்பட்டுள்ளன.

விகாரைகள் மற்றும் அறக்கட்டளை நிலையங்கள் தொடர்பான கட்டளைச் சட்டத்திற்கமைய தூர இடங்களில் வாசம் செய்யும் பிக்குமார்களுக்கு தமது தேவைகளை இலகுவாக பூர்த்தி செய்து கொள்ளும் பொருட்டு கண்டியிலும் இரத்தினபுரியிலும் திணைக்களத்தின் பிராந்திய அலுவலகங்கள் நிறுவப்பட்டு இயங்கி வருகின்றன.

சம்புத்த சாசனத்தின் நிலையிறுதி மேன்மை மற்றும் மேம்பாடு போன்றவற்றிற்காக கீழே காட்டப்பட்டுள்ள பிரதான செயற்பாடுகள் திணைக்களத்தினால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

01) சாசனப் பாதுகாப்பு சபையின் நடவடிக்கைகளை முன்னெடுத்தல்.

02) அறநெறிப் பாடசாலைகள் தொடர்பான பணிகள்

i. அறநெறிப் பாடசாலைகளுக்கான நூல்களை அச்சிட்டு விநியோகித்தல்
ii. அகில இலங்கை ரீதியில் அறநெறிப் பாடசாலைகளுக்கான பரீட்சைகளை நடாத்துதல்.
iii. அறநெறிப் பாடசாலை மாணவர்களின் ஆற்றல்களை கணிப்பீடு செய்யும் நிகழ்ச்சித்திட்டங்களை பிரதேச மட்டம், மாவட்ட மட்டம் மற்றும் அகில இலங்கை ரீதியில் நடாத்துதல்
iv. அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களின் கல்வித்தரத்தை மேம்படுத்துவதன் பொருட்டு அவர்களுக்கு சான்றிதழ்களை வழங்குவற்கான பரீட்சைகளை நடாத்துதல்.
v. அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கான சீருடைகளை வழங்குதல்.
vi. அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கான நூலகக் கொடுப்பனவுகளை வழங்குதல்.
vii. அறநெறிப் பாடசாலை ஆசிரியருக்கான அடையாள அட்டைகளை வழங்குதல்.
viii. அறநெறிப் பாடசாலை ஆசிரியருக்கான பயிற்சிகளை வழங்குதல்.
ix. அறநெறிப் பாடசாலைக் கட்டிடங்களை நிர்மாணிப்பதற்கான நிதியுதவிகளை வழங்குதல்.
x. வசதி குறைந்த அறநெறிப் பாடசாலைகளுக்கான உபகரணங்களை பெற்றுக்கொடுத்தல்.

xi. நீண்ட காலமாக தொடர்ந்து அறநெறிப் பாடசாலைகளில் பணியாற்றும் ஆசிரியர்களின் சேவையை பாராட்டி சான்றிதழ்களை வழங்குதல்.
xii. அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களின் மொழி அறிவை மேம்படுத்துவதன் பொருட்டு பாளி மொழி மேம்பாட்டு வகுப்புக்களை நடாத்துவதுடன் பரீட்சைகளையும் நடாத்துதல்.
xiii. கல்வித் தகைமை குறைந்த அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களின் கல்வித் தகைமைகளை மேம்படுத்தும் பொருட்டு ஜயவர்த்தன பல்கலைக்கழகத்துடனும் பௌத்த மற்றும் பாளி பல்கலைக்கழகத்துடன் இணைந்து தஹம் சரசவிய நிகழ்ச்சித்திட்டத்தை செயற்படுத்துதல்.

03) நிறுவனத்தின் நோக்கத்தை அடைவதன் பொருட்டு தொடர்புகளை பேணுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதுடன் திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள் தொடர்பான நிர்வாகப்பணிகள் அலுவலகப்பணிகள் கட்டிட பரிபாலனம் தபால் சேவைகள் மற்றும் வாகனங்கள் தொடர்பான பணிகளை நிறைவேற்றுதல்.

04) நிறுவனத்தின் செலவுகளைக் கட்டுப்படுத்தி வரவு செலவுத்திட்டத்தினூடாக வழங்கப்படும் நிதியை உரிய பணிகளின் பொருட்டு செலவு செய்வது அது தொடர்பான செலவு விபரங்களை சமர்பித்தல் சம்பளக் கொடுப்பனவு போன்ற நிதிக் கணக்குகளை மேற்கொள்ளுதல்.

05) விகாரைகள் அறக்கட்டளை நிலையங்கள் தொடர்பான கட்டளைச் சட்டத்தின் 4(1) அத்தியாயத்திற்கமைய பௌத்த மத அலுவல்கள் ஆணையாளர் நாயகத்தின் கீழ் இயங்கும் பௌத்த வழிபாட்டுத் தலங்களுக்கான பஸ்நாயக்க நிலமேக்கள்.'. பொறுப்பாளர்களை நியமித்தல் மற்றும் அவர்களின் பரிபாலனத்தை மேற்பார்வை செய்தல்.

06) பௌத்தசமய வழிபாட்டுத் தலங்களுக்குச் சொந்தமான சொத்துக்களின் பரிபாலனத்திற்கு தேவையான உதவிகளை வழங்குதல். இதன் போது இவ்வழிபாட்டுத் தலங்களுக்குச் சொந்தமான காணிகளை நீண்ட கால அடிப்படையில் குத்தகைக்கு வழங்குவதன் மூலமாக வருமானத்தைப் பெற்றுக் கொள்வதற்கு தேவையான அனுமதியை பெற்றுக்கொடுத்தல் மற்றும் அசையா சொத்துக்களை பாதுகாப்பதற்கான செயற்பாடுகளை முன்னெடுத்தல் வழிபாட்டுத் தலங்களின் சொத்துக்கள் தொடர்பான பிரச்சனைகளை தீர்ப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

07) நாட்டிலுள்ள அனைத்து விகாரைகளையும் பௌத்த மத அலுவல்கள் திணைக்களத்தில் பதிவு செய்தல் மற்றும் விகாரைகளின் தலைமைப் பிக்குமார்களின் பதவிகளை ஏற்றுக்கொள்ளல்.
08) விகாரைகளுக்கான நிதியுதவி, சிவுபசவுக்கான நிதியுதவி, வசதி குறைந்த விகாரைகளுக்கான நிதியுதவிகளை வழங்குதல்.
09) பிரதேச சாசனப் பாதுகாப்புச் சபைகளை நிறுவுவது தொடர்பான பணிகள்.
10) பிக்குமார்களின் ஈமைச் சடங்குகளுக்கு தேவையான நிதியுதவிகளை வழங்குதல்.

11) சுதந்திர தினம், வெசாக் மற்றும் பொசொன் உற்சவங்களை கொண்டாடுவதற்கு தேவையான பணிகளை மேற்கொள்ளுதல்.
12) விகாரைகளின் செயற்குழு சங்கங்களைப் பதிவு செய்தல்.
13) விகாரைகளுக்கு சலுகை அடிப்படையில் தொலைபேசி வசதி, நீர் விநியோகம், மின்சார வசதி போன்றவற்றை பெற்றுக்கொடுப்பதற்கு தேவையான சிபாரிசினை வழங்குதல்.
14) நிக்காயகள் மற்றும் நிக்காய பிரிவுகள் தொடர்பான பணிகள்.
15) பிள்ளைகளை துறவறத்தில் இணைத்துக் கொள்வதும் உபசம்பதா சடங்குகளை நடாத்துவதும்.
16) நிக்காயத் தலைமையகங்கள் தொடர்பான கொடுப்பனவுகள். (சாரதி / தொழிலாளர்கள்)
17) பௌத்த எழுத்தாளர்களின் நூல்களைக் கொள்வனவு செய்தல்.
18) பிக்குணிமார்கள் தொடர்பான பணிகள்

i. ஆராமைகளைப் பதிவு செய்தல்.
ii. அடைளாள அட்டைகளை வழங்குதல்
iii. கல்வி நிலையங்கள் தொடர்பான பணிகள்
iv. கூட்டங்கள் தொடர்பான பணிகள் மற்றும் சங்கமித்தா ஞாபகர்த்த விழா


19) பிக்குமார்களின் சாமனேர மற்றும் உபசம்பதா பதிவுகள்.

20) பௌத்த பிக்குமார்களின் அடையாள அட்டைகளை ஒழுங்கு செய்தல்.

21) விகாரைகளுக்கு சொந்தமான சொத்துக்கள் மற்றும் வங்கிக் கணக்குகளில் உள்ள பணம் தொடர்பான பணிகள்

மேலே குறிப்பிடப்பட்ட பணிகளுக்கு மேலதிகமாக வருடாந்தம் நடாத்தப்படும் தேசிய சுதந்திரதின விழா அரச வெசாக் உற்சவம், வருடாந்தம் இடம்பெறும் மாணவர்களுக்கான பிரதேச, மாவட்ட, அகில இலங்கை ரீதியிலான ஆற்றல் கணிப்பீட்டு போட்டிகள் சங்கமித்தா பெரஹரா மற்றும் சங்கமித்தா ஞாபகர்த்த விழா போன்றவற்றை பௌத்த மத அலுவல்கள் திணைக்களத்தினால் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படுகின்ற விசேட நிகழ்ச்சித் திட்டங்களாகக் குறிப்பிட முடியும்.


## பௌத்த மத அலுவல்கள் திணைக்களத்தின் அலுவலகக் கட்டமைப்பு



## சேவைக்கு அனுமதிக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களினதும் சேவை புரியும் உத்தியோகத்தர்களினதும் எண்ணிக்கை

| தொடர் இல. | பதவி | சம்பள வகுப்பு | உரிய சேவை | சேவை நிலை | தரம் | அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கை | | | சேவையிலுள்ளவர்களின் எண்ணிக்கை | | | வெற்றிடம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | நிரந் தரம் | ஒப்ப ந்தம் | தற்க ாலிக ம் | நிரந் தரம் | ஒப்ப ந்தம் | தற்க ாலிக ம் | |
| 01 | பௌத்த மத ஆணையாளர் நாயகம் | SL 3-2016 | இலங்கை நிர்வாக சேவை | சிரேஷ்ட | விசேட தரம் | 1 | 0 | 0 | 1 | 0 | 0 | 0 |
| 02 | பௌத்த மத ஆணையாளர் | SL 1-2016 | இலங்கை நிர்வாக சேவை | சிரேஷ்ட | I | 2 | 0 | 0 | 2 | 0 | 0 | 0 |
| 03 | பிரதான கணக்காளர் | SL 1-2016 | இலங்கை கணக்காளர் சேவை | சிரேஷ்ட | I | 1 | 0 | 0 | 1 | 0 | 0 | 0 |
| 04 | பிரதான உள்ளகக் கணக்காய்வாளர் | SL 1-2016 | இலங்கை கணக்காளர் சேவை | சிரேஷ்ட | I | 1 | 0 | 0 | 1 | 0 | 0 | 0 |
| 05 | பிரதி / உதவி ஆணையாளர் | SL 1-2016 | இலங்கை நிர்வாக சேவை | சிரேஷ்ட | II/ III | 4 | 0 | 0 | 3 | 0 | 0 | 1 |
| 06 | கணக்காளர் | SL 1-2016 | இலங்கை கணக்காளர் சேவை | சிரேஷ்ட | II/ III | 1 | 0 | 0 | 0 | 0 | 0 | 1 |
| 07 | சட்ட அதிகாரி | SL 1-2016 | - | சிரேஷ்ட | III | 1 | 0 | 0 | 1 | 0 | 0 | 0 |
| 08 | பிரதான எழுத்தாளர் | SL 1-2016 | ஒப்பந்த சேவை | சிரேஷ்ட | | 0 | 1 | 0 | 0 | 1 | 0 | 0 |
| 09 | துணை எழுத்தாளர் | SL 1-2016 | திணைக்களம் | சிரேஷ்ட | | 1 | 0 | 0 | 1 | 0 | 0 | 0 |
| 10 | பிரதி/உப எழுத்தாளர் | SL 1-2016 | ஒப்பந்த சேவை | சிரேஷ்ட | | 0 | 2 | 0 | 0 | 2 | 0 | 0 |
| 11 | நிர்வாக உத்தியோகத்தர் | MN 7-2016 | அரச முகாமைத்துவ உதவியாளர் சேவை | | අධි | 1 | 0 | 0 | 0 | 0 | 0 | 1 |
| 12 | கருத்திட்ட அதிகாரி | MN 4-2016 | அண்மித்த சேவை | மூன்றாம் நிலை | | 2 | 0 | 0 | 1 | 0 | 0 | 1 |
| 13 | பௌத்த மத கலாசார அலுவலர்கள் | MN 4-2016 | அண்மித்த சேவை | மூன்றாம் நிலை | | 453 | 0 | 0 | 418 | 0 | 0 | 35 |
| 14 | அபிவிருத்தி உதவியாளர் | MN 4-2016 | அண்மித்த சேவை | மூன்றாம் நிலை | | 38 | 0 | 0 | 36 | 0 | 0 | 2 |
| 15 | கணக்கியல் உதவியாளர் | MN 4-2016 | அண்மித்த சேவை | மூன்றாம் நிலை | | 1 | 0 | 0 | 1 | 0 | 0 | 0 |
| 16 | உதவி சட்ட ஆலோசகர் | MN 4-2016 | அண்மித்த சேவை | மூன்றாம் நிலை | | 1 | 0 | 0 | 1 | 0 | 0 | 0 |
| 17 | அபிவிருத்தி உத்தியோகத்தர் | MN 4-2016 | அபி.உத். சேவை | மூன்றாம் நிலை | | 235 | 0 | 0 | 204 | 0 | 0 | 31 |
| 18 | முகாமைத்துவ உதவியாளர் | MN 2-2016 | அரச முகாமைத்துவ உதவியாளர் சேவை | மூன்றாம் நிலை | I/ II/III | 45 | 0 | 0 | 38 | 0 | 0 | 7 |
| 19 | சாரதி | PL 3-2016 | ஒ.சா சே. | ஆரம்ப நிலை | | 12 | 0 | 0 | 11 | 0 | 0 | 1 |
| 20 | விடுதிப் பொறுப்பாளர் | PL 2-2016 | திணைக்களம் | ஆரம்ப நிலை | | 1 | 0 | 0 | 0 | 0 | 0 | 1 |
| 21 | அலுவலக உதவியாளர் | PL 1-2016 | அலு.உத. சேவை | ஆரம்ப நிலை | I/ II/III | 20 | 0 | 0 | 18 | 0 | 0 | 2 |
| 22 | லொறி உதவியாளர் | PL 1-2016 | திணைக்களம் | ஆரம்ப நிலை | | 2 | 0 | 0 | 0 | 0 | 0 | 2 |
| 23 | விடுதி உதவிப் பொறுப்பாளர் | PL 1-2016 | திணைக்களம் | ஆரம்ப நிலை | | 1 | 0 | 0 | 1 | 0 | 0 | 0 |
| 24 | காவல் தொழிலாளி | PL 1-2016 | திணைக்களம் | ஆரம்ப நிலை | | 1 | 0 | 0 | 1 | 0 | 0 | 0 |
| 25 | உபசரிப்பாளர் | PL 1-2016 | திணைக்களம் | ஆரம்ப நிலை | | 1 | 0 | 0 | 1 | 0 | 0 | 0 |
| 26 | திரிபீடக ஒருங்கிணைப்பு உதவியாளர் | PL 1-2016 | திணைக்களம் | ஆரம்ப நிலை | | 1 | 0 | 0 | 1 | 0 | 0 | 0 |
| **மொத்தம்** | | | | | | **829** | **3** | **0** | **744** | **3** | **0** | **85** |

# நிர்வாகப் பிரிவு


உதவி ஆணையாளர்
பிரிவுப் பொறுப்பாளர்
அபிவிருத்தி உத்தியோகத்தர் 6
முகாமைத்துவ உதவியாளர் 4
அலுவலக உதவியாளர் 1

திணைக்களத்தின் நிர்வாகப் பிரிவினால் மிகப்பாரிய அளவிலான செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் அவற்றில் சில பிரதான பணிகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

- ❖ திணைக்களத்தில் பணியாற்றும் அனைத்து அதிகாரிகளினதும் தனிப்பட்ட கோவைகளை பராமரித்தலும் அவை தொடர்பான பணிகளும்.
- ❖ சம்பள உயர்வுகளைப் பெற்றுக்கொடுத்தல்.
- ❖ உத்தியோகத்தர்கள் உடைமைக் கடன்களைப் பெற்றுக்கொள்வதற்கு தேவையான சிபாரிசுகளைப் பெற்றுக்கொடுத்தல்
- ❖ உத்தியோகத்தர்களை ஓய்வூதியத்திட்டத்தில் பதிவு செய்தல்.
- ❖ வாகனங்களை பழுது பார்த்தல் தொடர்பான பணிகள்.
- ❖ வாகனங்களைப் பராமரித்தல் மற்றும் அவை தொடர்பான அனைத்து விடயங்களும்.
- ❖ வாகனங்களின் காப்புறுதி தொடர்பான பணிகள்.
- ❖ வாகனங்களின் போக்குவரத்து தொடர்பான பதிவேடுகளை பரிசீலனை செய்தல்.
- ❖ வருமானச் சான்றிதழ்களைப் பெற்றுக்கொள்ளுதல்
- ❖ வாகனங்களுக்கான எரிபொருளைப் பெற்றுக்கொடுத்தல்
- ❖ திணைக்களத்தின் பொருட்டு புதிய பதவிகளை ஏற்படுத்துதல்
- ❖ உத்தியோகத்தர்களின் அன்றாட வருகை மற்றும் வெளியேற்றம் பற்றி பரிசீலனை செய்தல்.
- ❖ உத்தியோகத்தர்களின் விடுமுறை தொடர்பான பணிகள்.
- ❖ புகையிரத பயணச்சீட்டுக்களை விநியோகித்தல்.
- ❖ மேலதிக வேலை நேரக் கொடுப்பனவு போக்குவரத்து செலவுகளுக்கான கொடுப்பனவு போன்றவற்றுக்கான வவுச்சர்களை பெற்றுக்கொள்வதும் அனுமதிகளை வழங்குவதும்.
- ❖ போக்குவரத்து செலவுகளுக்குரிய வவுச்சர்களை பெற்றுக்கொள்வதும் அனுமதிகளை வழங்குவதும்.
- ❖ உத்தியோகத்தர்களின் வெளிநாட்டு பிரயாணங்களின் போது அவர்களின் விடுமுறை தொடர்பான பணிகள்.
- ❖ பெண் உத்தியோகத்தர்களின் பிரசவ கால விடுமுறை தொடர்பான பணிகள்.
- ❖ அபிவிருத்தி உத்தியோகத்தர்ளை சேவையில் இணைத்துக் கொண்டதன் பின்னர் உரிய காலத்தில் அவர்களது சேவையை நிரந்தரமாக்குதல்.
- ❖ பௌத்த கலைக்களஞ்சியத்தின் உப எழுத்தாளர் பதவிக்கான பதவி உயர்வு விதிமுறையொன்றை தயாரித்தல்.
- ❖ கனிஷ்ட சேவை உத்தியோகத்தர்களுக்கான சேவை வினைத்திறன பரீட்சைகளை நடாத்துதல்.
- ❖ கனணி, தட்டச்சு இயந்திரம் தொடர்பான பணிகள்.
- ❖ அலுவலகக் கடமைகளின் பொருட்டு வெளிநாடுகளுக்கு செல்லும் அதிரிகாரிகள் அங்கு தங்கியிருக்கும் காலத்திற்குரிய கொடுப்பனவுகளைப் பெற்றுக்கொடுத்தல்.
- ❖ உத்தியோகத்தர்களைப் பயிற்றுவித்தல் மற்றும் கற்கைநெறிகளில் ஈடுபடுத்துதல்.
- ❖ நீர், மின்சாரம், தொலைபேசி மற்றும் பத்திரிகைக் கட்டணங்களை செலுத்துதல் தொடர்பான அனைத்து பணிகளையும் மேற்கொள்ளுதல்.
- ❖ தபால் விடயங்கள் தொடர்பான பணிகள்
- ❖ திணைக்களத்தின் அதிகாரிகள் தொடர்பான அனைத்து நிர்வாகப் பணிகளும்
- ❖ பதவிகளை அனுமதித்தல் இணைத்துக் கொள்ளல் விதிமுறைகளை தயாரித்தல் உத்தியோகத்தர்களின் இடமாற்றங்களை பூர்த்தி செய்தல் பராளுமன்ற அறிக்கைளை தயார் செய்தல் அமைச்சரவை பத்திரங்களை தயாரித்தல் போன்ற நிர்வாகப் பணிகள்
- ❖ உத்தியோகத்தர்களின் ஒழுக்கம் சம்பந்தமான பணிகள்
- ❖ அதிகாரிகள் வங்கிக் கடன்களை பெற்றுக் கொள்வதற்கான அனுமதியை வழங்குதல்.
- ❖ உத்தியோகத்தர்களின் இடமாற்றம் அவற்றை நிரப்புதல் போன்ற பணிகள்
- ❖ உத்தியோகத்தர்களுக்கான காப்புறுதி தொடர்பான பணிகள் (அக்ரகார)
- ❖ நிர்வாகம் தொடர்பான பணிகளின் போது வேறு நிறுவனங்களுடன் இணைத்து பணியாற்றுதல்.
- ❖ தொலைபேசி, கணனி, தொலைநகல் இயந்திரம் போன்றவற்றை பராமரித்தல்.
- ❖ கட்டிடங்களை பராமரித்தல் மற்றும் புனரமைத்தல் (மகாநாயக்க சாரிக்காராமை, கண்டி பிராந்திய அலுவலகம், இரத்தினபுரி பிராந்திய அலுவலகம்)
- ❖ தலைமை அதிகாரிகள், பிரிவுப் பிரதான அதிகாரிகளுக்கான கூட்டங்களை நடாத்துதல்.

- ❖ மாவட்ட ரீதியில் கலாசார உத்திரோயகத்தர்களுக்கான கூட்டங்களை நடாத்துவது மற்றும் அது தொடர்பான பணிகள்.
- ❖ பொது நிர்வாக அமைச்சின் சுற்று நிருபங்கள் மற்றும் ஏனைய அனைத்து சுற்று நிருபங்களை பின்பற்றுவதும் அவை தொடர்பான பணிகளை மேற்கொள்வதும்.
- ❖ தேர்தல் கடமைகளின் போது உத்தியோகத்தர்களை ஈடுபடுதுவத தொடர்பான பணிகள்.
- ❖ அலுவலக அடையாள அட்டைகளை தயாரித்தல்.
- ❖ கனிஷ்ட சேவை உத்தியோகத்தர்களுக்கான சீருடைகளைப் பெற்றுக்கொடுத்தல்.
- ❖ அலுவலக சாவிகளைப் பொறுப்பேற்றல் தொடர்பான பணிகள்.
- ❖ அலுவலக உள்ளக இடமாற்றங்களை மேற்கொள்ளதல்.
- ❖ திணைக்களத்தினால் நடாத்தப்படும் கூட்டங்கள் தொடர்பான நாளேட்டினை தயாரித்தல்.

**01.1. 2018 இல் நிர்வாகப் பிரிவனால் மேற்கொள்ளப்பட்ட விசேட பணிகள்.**


1. பொ.நி.சு. 03/2006 இற்கமைய திணைக்களத்திற் இணைத்துக் கொள்ளப்பட்ட அனைத்து உத்தியோகத்தர்களினதும் வேதனத்தை 2018.01.01 திகதிக்கும் 2019.01.01 திகதிக்கும் பரிவர்த்தனை(மாற்றம்) செய்தமை.
2. 2018 இன் பொருட்டு அனைத்து மாவட்ட செயலகங்கள் மற்றும் பிரதேச செயலகங்களில் பணியாற்றும் பௌத்த சமய கலாசார உத்தியோகத்தர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், அபிவிருத்தி உதவியாளர்களுக்கு இடமாற்றங்களைப் பெற்றுக்கொடுப்பதற்கான விண்ணப்பங்களை கோரியமை.
3. அரச பொது நிர்வாகம் மற்றும் முகாமைத்துவ அமைச்சினால் இணைத்துக் கொள்ளப்பட்ட பௌத்த மத அலுவல்கள் திணைக்களத்தின் கீழ் நியமனம் வழங்கப்பட்ட பட்டதாரி பயிலுனர்களை பிரதேச செயலகங்களில் பணிக்கமர்த்தல்.
4. 1999 மற்றும் 2005 இல் பட்டதாரிகளுக்கு தொழில் வழங்கும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் இத்திணைக்களத்திற்கு இணைத்துக் கொள்ளப்பட்ட உத்தியோகத்தர்களை அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவை வகுப்பினுள் உள்வாங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.
5. திணைக்களத்தின் கீழ் பணியாற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் ஆக்கத்திறன் கணீப்பீட்டு பரீட்சை முடிவுகளை வெளியிடுதல்.
6. பௌத்த மத அலுவல்கள் கலாசார உத்தியோகத்தர்களுகான அலுவலகப் பையினை பெற்றுக்கொடுக்கும் நிகழ்ச்சித்திட்டத்தை நடைமுறைப்படுத்தியமை.
7. உள்ளக தொலைபேசி இணைப்புக்களை புதுப்பித்தமை.
8. சட்ட உத்தியோகத்தருக்கான அலுவலகத்தை இரண்டாம் மாடியில் நிறுவியமை.
9. இத்திணைக்களத்தின் கீழ் இயங்கும் பௌத்த கலைக் களஞ்சியத்தின் தொகுப்பு பணிகளின் பொருட்டு ஒப்பந்த அடிப்படையில் 03 எழுத்தாளர்களை இணைத்துக் கொள்வதன் பொருட்டு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அனுமதியை பெற்றுக்கொள்ள முடிந்தது. இது தொடர்பான இணைத்துக்கொள்ளும் பணிகளை மேற்கொள்ளும் பொருட்டு விண்ணப்பங்களை கோரி வர்த்தமானியிலும் பிரதான பத்திரிகைகளிலும் விளம்பரங்கள் பிரசுரிக்கப்பட்டன.
10. திணைக்களத்திற்கு சொந்தமான வாகனங்களை பரிபாலித்தல் அவற்றை புனரமைப்புச் செய்தல் மற்றும் போக்குவரத்து தொடர்பான பணிகளை முன்னெடுத்தல்.

2018.12.31 இற்கு திணைக்களத்திற்கு சொந்தமான வாகனங்கள்

- ➢ வான்கள் - 04
- ➢ லொறிகள் - 03
- ➢ கார்கள் - 03
- ➢ கெப் வண்டிகள் - 02

11. திணைக்கள உத்தியோகத்தர்களுக்கான ஊழியர் சேமலாப ரன் மற்றும் ரிதீ யோசனைத் திட்டதில் பதிவு செய்வதற்கான பணிகளை மேற்கொள்ளல்.
12. மகாநாயக்க சாரிக்காராமையின் நிர்வாகப் பணிகள்.
13. திணைக்கள உத்தியோகத்தர்களுக்கான அனர்த்த நிவாரண கடன்களைப் பெற்றுக்கொடுத்தல்.
14. 2017 இன் செயலாற்றுகை அறிக்கையினை மும்மொழிகளிலும் அச்சிட்டமை.
15. உத்தியோகத்தர்களுக்கான ஆக்கத்திறன் மற்றும் தலைமைத்துவப் பயிற்சிப்பட்டறையை ரன்டெம்பே வனஜீவராசிகள் நிலைய நிறுவனத்தில் நடாத்தியமை.

# விகாரைகள் அறக்கட்டளை நிலையங்கள் பிரிவு



1931 இன் 19 ஆம் இலக்க விகாரைகள் அறக்கட்டளை நிலையங்கள் தொடர்பான சட்டத்திற்கமைய பௌத்த மத அலுவல்கள் ஆணையாளர் நாயத்திற்கு வழங்கப்பட்டுள்ள பொறுப்புக்களை நிறைவேற்றும் பணியானது இப்பிரிவிற்கு வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் புத்தசாசனத்தின் வளர்ச்சியும் நிலையுறுதியும் உறுதி செய்யப்பட்டுள்ளது.

### 02.1. விகாரைகளைப் பதிவு செய்தல்

விகாரைகளைப் பதிவு செய்வதன் பொருட்டு கிடைக்கப்பெற்றுள்ள விண்ணப்பப் படிவங்களின் எண்ணிக்கை = 631

1. பதிவு செய்யப்பட்ட விகாரைகளின் எண்ணிக்கை = 551
2. மகாநாயக்க தேரர்களினால் விகாராதிபதி பதவிக்கு சிபாரிசு செய்து அனுப்பப்பட்ட கடிதங்களின் பொருட்டு பதில் அனுப்பப்பட்ட கடிதங்களின் எண்ணிக்கை = 353

### 02.2. விகாரைகள் மற்றும் அறக்கட்டளை நிலையங்களுக்கு சொந்தமான காணிகளைக் குத்தகைக்கு வழங்குதல்

1. கிடைக்கப்பெற்ற குத்தகை விண்ணப்பப் படிவங்களின் எண்ணிக்கை = 595
2. வழங்கப்பட்ட குத்தகைகளின் எண்ணிக்கை = 135
3. திருத்தங்கள் இடம்பெற்ற குத்தகைகளின் எண்ணிக்கை = 53

### 02.3. அமரத்துவம் எய்திய பிக்குமார்களுக்கு சொந்தமான சேமிப்புக் கணக்குகளில் உள்ள நிதியை விடுவித்தல்

1. இவ்வாறு நிதியை விடுவிக்கக் கோரி கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்களின் எண்ணிக்கை = 93
2. இத்தகைய விண்ணப்பங்களுக்கமைய சிபாரிசு செய்து விடுவிக்கப்பட்ட நிதியின் பெறுமதி = ரூ. 32901821.06

### 02.4. விகாரைகள் மற்றும் அறக்கட்டளை நிலையங்களுக்க சொந்தமான காணிகளில் அமைந்திருக்கும் மரங்களை வெட்டுவதற்கான அனுமதியைப் பெற்றுக்கொடுத்தல்.

1. மரங்களை வெட்டுவதற்கான அனுமதி கோரி விண்ணப்பிக்கப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை = 44
2. அனுமதிக்கப்பட்ட விண்ணப்பப்படிவங்களின் எண்ணிக்கை = 44

### 02.5. புனித பூமிகளுக்கான காணி உறுதிப் பத்திரங்களைப் பெற்றுக்கொடுத்தல்

1. கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்களின் எண்ணிக்கை = 27
2. சிபாரிசு வழங்கப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை = 17

### 02.6. பிக்குமார்கள் தனிப்பட்ட ரீதியில் கொள்வனவு செய்யப்பட்ட உடமைகள் விகாரைக்குச் சொந்தமானது இல்லை என்பதை உறுதிப்படுத்துதல்

1. கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்களின் எண்ணிக்கை = 47
2. உறுதிப்படுத்த விண்ணப்பங்களின் எண்ணிக்கை = 32

### 02.7. ஆரண்ய சேனாசனைகளை நிர்மாணிப்பதற்கான அனுமதி வழங்குதல்

வன பாதுகாப்பு திணைக்களத்திற்கு சொந்தமான காணிகளில் ஆரண்யசேனாசனைகளை நிர்மாணிப்பதற்கான அனுமதி கோரி பிக்குமார்களிடமிருந்து விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றுள்ளதுடன், கீழுள்ளவாறு சிபாரிசுகள் பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளன.

1. கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்களின் எண்ணிக்கை = 38
2. சிபாரிசு வழங்கப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை = 13

**02.8. பொறுப்பாளர்களை நியமித்தல் மற்றும் வழிபாட்டுத்தலங்கள் தொடர்பான பணிகள்**

விகாரைகள் மற்றும் அறக்கட்டளை நியைங்கள் தொடர்பான கட்டளைச்சட்டத்தின் 4(1) அத்தியாயத்தின் கீழ் பௌத்த மத அலுவல்கள் ஆணையாளருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்திற்கமைய நிர்வகிக்கப்படும் வழிபாட்டுத்தலங்களின் பொறுப்பாளர்களை நியமித்தல் மற்றும் அவர்களின் பணியை கண்காணித்தல் போன்ற பணிகளை விகாரைகள் மற்றும் அறக்கட்டளை நிலையங்கள் பிரிவானது மேற்கொண்டு வருகின்றது. அதற்கமைய விகாரைகள் மற்றும் அறக்கட்டளை நியைங்கள் தொடர்பான கட்டளைச்சட்டத்தின் 4(1) அத்தியாயத்தின் கீழ் நிர்வகிக்கப்படும் (பிரதான அலுவலகத்தினால்) 124 விகாரைகள் / அறக்கட்டளை நிலையங்களின் பொருட்டு 2018 இல் பின்வருமாறு கடமை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

1. விகாரைகளின் எண்ணிக்கை = 105
2. பொறுப்பாளர்களை நியமிப்பதன் பொருட்டு கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்களின் எண்ணிக்கை – 42
3. வழங்கப்பட்ட பொறுப்பாளர் சான்றிதழ்களின் எண்ணிக்கை = 39

1. அறக்கட்டளை நியைங்களின் எண்ணிக்கை = 32
2. பஸ்நாயக்க நிலமேக்களின் பதவிக்காலம் முடிவுற்ற அறக்கட்டளை நியைங்களின் எண்ணிக்கை = 02
3. நியமிக்கப்பட்ட பஸ்நாயக்க நிலமேக்களின் எண்ணிக்கை = 02

1. உடமைகள் பட்டியலிடப்பட்டுள்ள வழிபாட்டுத்தலங்களின் எண்ணிக்கை = 03
   a. அறக்கட்டளை நியைங்களின் எண்ணிக்கை = 01
   b. விகாரைகளின் எண்ணிக்கை = 03

2. வருடாந்நதம் பொருள் கணக்கெடுப்பினை மேற்கொண்டுள்ள விகாரைகளின் எண்ணிக்கை = 10

1. கிடைக்கப்பெற்றுள்ள வருடாந்த உத்தேச வரவு செலவு மதிப்பீட்டு அறிக்கைகளின் எண்ணிக்கை = 82
2. கிடைக்கப்பெற்றுள்ள அரையாண்டு உத்தேச வரவு செலவு மதிப்பீட்டு அறிக்கைகளின் எண்ணிக்கை = 52
3. உத்தேச வரவு செலவுத்திட்ட அறிக்கை அனுமதிக்கபட்டு மீண்டும் சமர்ப்பிக்கப்பட்டவைகளின் எண்ணிக்கை = 73
4. உண்டியல் பணம் தொடர்பாக கண்காணிக்கப்பட்ட சந்தர்பபங்கள் = 47

அமரத்துவம் எய்திய பிக்குமார்களுக்கு சொந்தமான 12 வாகனங்களுக்கான உரிமை கோரிய விகாராதிபதிகளுக்கு தேவையான சிபாரிசுகள் வழங்கப்பட்டுள்ளன. மாணிக்கக்கல் அகழ்வின் பொருட்டு கிடைக்கப்பெற்ற 02 விண்ணப்பங்களுக்கான அனுமதி பெற்றுக்கொடுக்கப்பட்டதுடன் வழிபாட்டுத் தலங்களுக்கு சொந்தமான காணிகளை அரச கருத்திட்டங்களின் பொருட்டு கையகப்படுத்தும் போது வழங்கப்படும் நஷ்டஈட்டைப் பெற்றுக்கொள்வதற்கான சிபாரிசினைப் பெற்றுக்கொடுத்தல். (இத்தகைய சிபாரிசின் கீழ் விடுவிக்கப்பட்ட நஷ்டஈட்டுத் தொகையின் பெறுமதி ரூ. 33843091.00 ஆகும்.)

மேலும் வழிபாட்டுத்தலங்களின் அன்றாட நடவடிக்கைகளுடன் தொடர்புடையதாக நீதிமன்றம் / இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவில் ஆஜரான சந்தர்ப்பங்கள் 07, வழிபாட்டுத்தலங்களின் பிரச்சினைகள் தொடர்பான நிலையப் பரிசோதனைகள் 19, நடமாடும் சேவைகள் 06, உரிய தரப்பினருடனான கலந்துரையாடல்கள் 29 உம் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**2019 இல் மேற்கொள்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள நிகழ்ச்சித்திட்டங்கள்**

i. விகாரைகள் மற்றும் அறக்கட்டளை நிலையங்கள் தொடர்பான கட்டளைசட்டத்தின் பொருட்டு சட்ட வரைமுறைகளை தயாரித்தல்.
ii. காணிப் பிரச்சினைகள் நிலவும் வழிபாட்டுத் தலங்களின் காணிப் பிரச்சினைகளை தீர்த்தல்.


iii. உள்ளக கணக்காய்வு தொடர்பில் முறையான நடவடிக்கைகளை முன்னெடுத்தல், இதுவரை உள்ளக கணக்காய்வினை மேற்கொள்ளாத வழிபாட்டுத் தலங்கள் தொடர்பில் முனனெடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் கலந்தாலோசித்தல்.

iv. விகாரைகள் மற்றும் அறக்கட்டளை நிலையங்கள் பிரிவின் பணிச்சுமையை குறைத்தல்.

v. விகாரைகள் தொடர்பான கோவைகள் பெருமளவில் காணப்படுவதனால், அவற்றை பாதுகாப்பான முறையில் களஞ்சியப்படுத்தல்.


vi. அன்றாட கடமைகளின் போது அத்தியாவசியமாக மேற்கொள்ளப்பட வேண்டிய சேவைகளை இனங்காணுதல்.

# அறநெறிப் பாடசாலைகள் பிரிவு



### 03.1. அறநெறிப் பாடசாலைகளை பதிவு செய்தல்

மாணவர்களின் ஒழுக்க மேம்பாட்டினை விருத்தி செய்வதற்கு அறநெறிப் பாடசாலைகள் மிகவும் உறுதுணையாக அமைகின்றன. இந்த நோக்கத்துடன் ஆரம்பிக்கப்படும் அனைத்து அறநெறிப் பாடசாலைகளும் பௌத்த மத அலுவல்கள் திணைக்களத்தின் கீழ் பதிவு செய்யப்படுகின்றன. பதிவின் பின்னர் அறநெறிப் பாடசாலைகள் தொடர்ந்தும் இயங்குவதற்கு தேவையான நூல்கள் வரவு இடாப்புக்கள் போன்ற அத்தியாவசியப் பொருட்களை விநியோகிக்கும் பொருட்டு வருடாந்தம் தகவல்கள் பெற்றுக்கொள்ளப்படுகின்றன.




வரைபு 03.1- இலங்கையில் பதிவு செய்யப்பட்ட அறநெறிப் பாடசாலைகளின் எண்ணிக்கை வளர்ச்சி வீதம்


### 03.2. அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கான பரீட்சைகளை நடாத்துதல்

அறநெறிப் பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்களின் சமய அறிவை பரீட்சிக்கும் பொருட்டு இது நடாத்தப்படுகின்றது. 2018 இல் 3940 பரீட்சை நிலையங்களில் 980,262 மாணவர்களின் பொருட்டு பரீட்சையானது நடாத்தப்பட்டது.


| வருடம் | 2007 | 2008 | 2009 | 2010 | 2011 | 2012 | 2013 | 2014 | 2015 | 2016 | 2017 | 2018 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| விண்ணப்பதார்கிளின் எண்ணிக்கை | 716,840 | 757,927 | 765,887 | 777,576 | 787,692 | 808,161 | 813,432 | 855,868 | 950,274 | 913,720 | 976,639 | 988,262 |
| பரீட்சை நிலையங்களின் எண்ணிக்கை | 3,667 | 4,068 | 3,888 | 3,884 | 5,758 | 3,920 | 3,830 | 3,842 | 3,907 | 3,938 | 3,361 | 3940 |

**03.3. அறநெறிப் பாடசாலைகளின் ஆசிரியர்கள் மாணவர்களின் தகவல்களை சேகரித்தலும், பேணுதலும்.**

இதன் மூலம் நாடு முழுவதிலும் உள்ள பௌத்த அறநெறிப் பாடசாலைகளில் கற்பிக்கும் ஆசிரியர்கள் கற்கும் மாணவர்களின் எண்ணிக்கை பற்றிய பதிவேடுகளை பேணும் நடவடிக்கையானது மேற்கொள்ளப்படுகின்றது. இதன் மூலம் அறநெறிப் பாடசாலை ஆசிரியர்கள் மாணவர்கள் போன்றோரின் தகவல்களைப் பெற்றுக் கொண்டு எதிர்கால செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு சந்தர்ப்பம் கிடைக்கப்பெறுகின்றது.





வரைபு 03.2- இலங்கையில் அறநெறிப் பாடசாலை மாணவர்களின் எண்ணிக்கை வளர்ச்சி வீதம்





வரைபு 03.3 இலங்கையில் அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களின் எண்ணிக்கை வளர்ச்சி வீதம்

வருடந்தோறும் அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கான நூலகக் கொடுப்பனவு மற்றும் சீருடைகளை வழங்குவதற்கான தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கும் நூல்களை வழங்குவதற்கும் மாணவர்களின் தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கும் மற்றும் ஏனைய தேவைகளின் பொருட்டு தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்குமான நோக்கத்துடன் இப்பதிவேடானது பேணப்படுகின்றது.




**2018 இல் 21 மாவட்டங்களில் 10,018 அறநெறிப்பாடசாலையில் மாணவர்களின் மொத்த எண்ணிக்கை 2,006,911 ஆகும்.**

2018 இல் அறநெறிப் பாடசாலை மாணவர்களின், ஆசிரியர்களின் தகவல்களைச் சேகரிப்பதற்கான விண்ணப்பப்படிவங்கள் 60,000 அச்சிடப்பட்டதுடன் அதற்கான செலவு ரூ. 357,063.50




வரைபு 03.4 2018 அறநெறிப் பாடசாலைகளின் எண்ணிக்கை


### 03.4. 123 ஆவது அறநெறிப் பாடசாலைகள் தினக் கொண்டாட்டம்

அகில இலங்கை பௌத்த அறநெறிப் பாடசாலைகள் தினமானது இலங்கையின் முதலாவது அறநெறிப் பாடசாலையான காலி வெலிவத்தை விஜயானந்த அறநெறிப் பாடசாலை ஆரம்பிக்கப்பட்ட 1895 ஆகஸ்ட் 03 ஐ ஞாபகப்படுத்தும் வகையில் வருடந்தோறும் ஆகஸ்ட் 03 ஆம் திகதி கொண்டாடப்படுகின்றது. 2018 இல் இதன் 123 தினக் கொண்டாட்ட தேசிய நிகழ்வானது ஆகஸ்ட் 3 ஆம் திகதி இரத்தினபுரி, பெல்மடுல்லை, ரில்ஹேனை, அபயவர்தனாராமை விகாரையில் இடம்பெற்றது.

இதன் போது இரத்தினபுரி மாவட்ட அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கான கணிப்பீட்டு போட்டிகளில் வெற்றிபெற்ற ஏனைய அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கான பரிசில்களை வழங்குல், அறநெறிப் பாடசாலை ஆசிரியர்கள், பெற்றோர்களை உள்ளடக்கியதான வழிகாட்டிப் பேரணி மற்றும் பௌத்த மதத்துடன் தொடர்புடைய ஓவியங்கள், நூல்கள், சிற்புக் கண்காட்சி என்பனவும் நடாத்தப்பட்டது.

அறநெறிப் பாடசாலைகளின் முன்னேற்றத்தின் பொருட்டு சேவையாற்றிய பிக்குமார்களை கௌரவித்தல், அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுகான வைத்தியச் செலவுகளைப் பெற்றுக்கொடுத்தல் மற்றும் சமாதான நீதவான் பதவிகளைப் பெற்றுக்கொடுத்தல் போன்ற நிகழ்வுகளும் இதன்போது இடம்பெற்றன.


### 03.5. ஆசிரியர்களுக்கான நூலகக் கொடுப்பனவு, சீருடைகளைப் பெற்றுக்கொடுத்தல்




வரைபு 03.5 – 2017 - அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களின் எண்ணிக்கை

அறநெறி ஆசிரியர்களின் பொருட்டு 2006 ஆம் வருடம் தொடக்கம் நூலகக் கொடுப்பனவாக ரூ. 2000 வழங்கப்பட்டு வருவதுடன் 2017 தொடக்கம் இக்கொடுப்பனவானது ரூ. 5000 வீதம் 2018 இலும் 323 சாசனப் பாதுகாப்புச் சேர்ந்த 10,018 அறநெறிப் பாடசாலைகளின் ஆசிரியர்கள் 98,255 பேருக்கு வழங்கப்பட்டது.

அதற்கமைய ஒரு ஆசிரியருக்கு ரூ. 5000 வீதம் வருடாந்தக் கொடுப்பனவானது வழங்கப்பட்டது. இதற்கென ஒதுக்கப்பட்ட நிதி **ரூ. 494,000,000.00** ஆகக் காணப்பட்டதுடன், இது 95,985 ஆசிரியர்களின் பொருட்டு போதுமானதாகும். இவ்வருடம் ஆசிரியர்களின் எண்ணிக்கை அதிகரித்துக் காணப்பட்டமையினால் அதிகரித்த 3007 ஆசிரியர்களின் பொருட்டு மேலதிகமாகத் ரூ. 15,035,000 நிதியானது தேவைப்பட்டதுடன், சில பிரதேச செயலகங்களில் கொடுப்பனவை செலுத்திதன் பின்னர் எஞ்சிய நிதியைக் கொண்டு மேலதிகமாகத் தேவைப்பட்ட நிதித்தேவை பூர்த்தி செய்யப்பட்டது. அத்துடன் நுவரெலியா மாவட்டத்தின் அம்பகமுவை பிரதேச செயலகப் பிரிவைச் சேர்ந்த 317 ஆசிரியர்களின் பொருட்டு இன்னும் ரூ. 158,500 நிதியானது தேவைப்படுகின்றது.
தமது சுயவிருப்பத்தின் பேரில் எந்தவொரு பலனையும் எதிர்பாராமல் பௌத்த அறநெறிப் பாடசாலைகளில் கல்வி கற்கும் ஆசிரியர்களை ஊக்குவிக்கும் முகமாக 2004 தொடக்கம் தொடர்ச்சியாக ஒரு வருட சேவையைப் பூர்த்தி செய்த 18 வயது நிரம்பிய ஆசிரியர்களுக்கு திணைக்களத்தினால் சீருடை ஒன்று வழங்கப்படுகிறது.




வரைபு 03.6 – 2017 - அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கான சான்றிதழ் பரீட்சை முடிவுகள் - 2018

சீருடைகளைப் பெற்றுக்கொண்டவர்கள் மிகவும் மகிழ்ச்சியுடன் காணப்படுகின்றார்கள். ஆசிரியர்களுக்கான சீருடைகள் வழங்கும் செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர் கற்பித்தலில் ஈடுபடும் ஆசிரியர்களின் எண்ணிக்கையில் வளர்ச்சி காணப்படுகின்றது. அத்துடன் கற்கும் மாணவர்களின் எண்ணிக்கையும் அதிகரித்து காணப்படுகின்றது. எனவே ஆசிரியர்களுக்கு சீருடைகளை வழங்குவதன் மூலமாக ஒழுக்க மேம்பாடுடைய சமூகம் ஒன்றை தோற்றுவிப்பதற்கான செயற்பாடானது மிகவும் இலகுவாகப்படுகின்றது. இதற்கென அரசாங்கத்தினால் வருடம் தோறும் ரூ. 150 மில்லியன் மேலதிகமான நிதி செலவிடுகின்றது. இதற்கென இம்முறையும் ரூ. 127.9 மில்லியன்கள் வரையில் செலவு செய்யப்பட்டுள்ளது. இதன் பொருட்டு 2018 இல் 86,000 ஆசியர்கள் தகுதியானவர்களாகக் காணப்பட்டதுடன், இவர்கள் அனைவருக்கும் சீருடையானது பெற்றுக்கொடுக்கப்பட்டது.

### 03.6. **அறநெறிப்பாடசாலை ஆசிரியர்களுக்கு சான்றிதழ் வழங்குவதற்கான பரீட்சை**

இப்பரீட்சையை நடாத்துவதன் மூலமாக கீழே குறிக்கப்பட்டுள்ள நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

1. தற்போது சேவையாற்றும் அறநெறிப்பாடசாலை ஆசிரியர்களின் கல்வித் தகைமையை மேம்படுத்தல்.
2. ஆறநெறிப் பாடசாலைகளில் கற்பித்தல் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள ஆசிரியர்களின் சேவையை பாராட்டுதல்.
3. ஆசிரியர்களின் அறிவுத்திறனை மேலும் விருத்தி செய்வதுடன் உயர்கல்வியை தொடரச் செய்தல்.
4. அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கு சமூகத்தில் கௌரவத்தை ஏற்படுத்துவதுடன் அவர்களுக்கு மக்களிடையே நன்மதிப்பை ஏற்படுத்தல்.

2018 இல் 19 மாவட்டங்களைச் சேர்ந்த பரீட்சாத்திகளுக்கென 23 பரீட்சை மத்திய நிலையங்களில் இப்பரீட்சை நடாத்தப்பட்டது. பரீட்சைக்கென 11,494 பேர் விண்ணப்பித்திருந்ததுடன் அதில் 10,936 பேர் தேவையான தகைமைகளைக் கொண்டிருந்தனர். இதில் பரீட்சைக்கு தோற்றியவர்கள் 7,827 பேர்களாவர். பரீட்சைக்கு தோற்றாதவர்களின் எண்ணிக்கை 3,109 பேர் ஆகக் காணப்பட்டதுடன், இது தகுதி பெற்றவர்களின் **28.43%** ஆகும்.

2018 ஜூன் மாதம் நடாத்தப்பட்ட இப்பரீட்சைக்கென ரூ. 1,898,374.70 நிதி செலவு செய்யப்பட்டதுடன் 2018 செப்டெம்பர் மாதம் 30 ஆம் திகதி பரீட்சை முடிவுகள் வெளியிடப்பட்டன.

### 03.7. **அறநெறிப் பாடசாலை மாணவர்களின் ஆற்றல்களை கணிப்பீடு செய்தல்.**

அறநெறிப் பாடசாலை மாணவ மாணவியரின் அறிவுத்திறனை மேம்படுத்தும் பொருட்டும் புத்த தர்மத்தை போதிப்பதன் பயனைப் பெற்றுக்கொள்வதற்கும், நற்பண்புகள் நிறைந்த மாணவ சமூகமொன்றை கட்டியெழுப்பும் நோக்கத்துடனும் வருடம் தோறும் நடாத்தப்படும் அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கான ஆற்றல் கணிப்பீட்டு நிகழ்வானது இவ்வருடமும் மிகவும் வெற்றிகரமாக நடாத்தப்பட்டது.

மாணவர்களுக்கான ஆற்றல் கணிப்பீட்டு நிகழ்வானது அறநெறிப் பாடசாலை மட்டம், பிரதேச மட்டம், மாவட்ட மட்டம் மற்றும் அகில இலங்கை ரீதியாக நான்கு கட்டங்களாக நடாத்தப்படுகின்றது.
இம்முறை இந்நிகழ்வானது மொனராகலை மகாநாம தேசிய பாடசாலையில் இடம்பெற்றதுடன், இதில் பிரதம அதிதியாக புத்தசாசன அமைச்சர் கௌரவ காமிணீ ஜயவிக்ரம பெரேரா அவர்கள் கலந்து சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது.

பிரதேச மட்டத்திலான ஒழுங்கு செய்தல் பணிகளுக்கெண பிரதேச சாசனப் பாதுகாப்புச் சபைகளின் செயலாளர் தேரருக்கு ரூ.10,000.00 வீதமும் மாவட்ட மட்டத்திலான ஒழுங்கமைப்புகளுக்கு மாவட்ட சாசனப் பாதுகாப்புச் சபை செயலாளர் தேரருக்கு ரூ. 18,000 வீதமும் வழங்கப்பட்டது.

இந்நிகழ்விற்கான உத்தேச செலவு மதிப்பீடு ரூ. 24,966,828.43 ஆக இருந்ததுடன் மொத்தமாக ரூ.**16,000,000.00 நிதியானது 2018 இல் செலவு செய்யப்பட்டது.**

### 03.8. அறநெறிப்பாடசாலைகளுக்கான நூல்களை அச்சிடுதல்.





ஒழுக்க மேம்பாடுடைய சமூகமொன்றை கட்டியெழுப்புவதற்காக அறநெறிக் கல்வியின் முக்கியத்துவத்தை உணர்ந்து அதனை மேம்படுத்தும் நோக்கத்துடன் அறநெறிப்பாடசாலைகளுக்கான நூல்களை அச்சிட்டு விநியோகிக்கும் செயற்பாடானது திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

வருடத்திற்கு தேவையான நூல்களை பற்றிய விபரத்தை அறநெறிப்பாடசாலைகளிடம் இருந்து பெற்றுக் கொண்டதன் பின்னரே அச்சுப் பணிகள் ஆரம்பிக்கப்படுகின்றன. நூல்களானது அரச

அச்சகத்திலும், அரசாங்க கூட்டுத்தாபனத்திலும் மற்றும் பிரிண்டஸ் எக்ஸலட் நிறுவனத்திலும் மேற்கொள்ளப்படுகின்றன. இதற்கென ரூ.150,000,000 நிதி ஒதுக்கப்பட்டதுடன் இதன் போது மொத்தமாக ரூ.149,994,482 நிதியானது செலவு செய்யப்பட்டது.

இந்த நூல்களை அச்சிட்டு திணைக்களத்தின் களஞ்சியத்தில் ஒப்படைத்ததன் பின்னர் 2018 இற்கு தேவையான நூல்கள் நாடு பூராகவும் அமைந்துள்ள அறநெறிப்பாடசாலைகளுக்கு விநியோகிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மொத்த மாவட்டங்களின் எண்ணிக்கை | = 21 |
| பிரதேச சாசனப் பாதுகாப்புச் சபைகளின் எண்ணிக்கை | = 322 |
| அறநெறிப் பாடசாலைகளின் எண்ணிக்கை | = 10018 |
| பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்த நூல்களின் எண்ணிக்கை | = 3164940 |

அட்டவணை 03.5 அறநெறிப் பாடசாலைகளுக்கான நூல் விநியோகம் - 2018 சராம்சம்.


- 2020 இன் பொருட்டு அச்சிடுவதற்க வழங்கப்பட்டுள்ள நூல்களின் எண்ணிக்கை 237,000,002 ஆகும்.

## 03.9. புத்த ஜயந்தி நூல் நிலையம்

**2018 இல் முன்னேற்றம்**

பொதுமக்களின் தேவை கருதி சமய நூல்களை விற்பனை செய்யும் பணியானது பௌத்த மத அலுவல்கள் திணைக்களத்தின் கீழ் இயங்கும் புத்த ஜயந்தி நூல் நிலையத்தினால் மேற்கொள்ளப்படுகின்றது. சரள சிங்களத்தில் எழுதப்பட்ட திரிபிடகங்கள், பௌத்த கலைக் களஞ்சியம் அடங்கலாக பெருமளவிலான நூல்கள் இங்கு விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன.
2018 இல் இத்தகைய நூல்கள் விற்பனையின் மூலம் ரூ. 465,163.00 நிதியானது கிடைக்கப்பெற்றது. இவ்வாறு விற்பனையின் மூலம் கிடைக்கப்பெறும் நிதியானது அந்தந்த நாட்களிலேயே பிரதான திணைக்களத்தில் ஒப்படைக்கப்படும்.

# அபிவிருத்திப் பிரிவு


உதவி ஆணையாளர்
பிரிவுப் பொறுப்பாளர்
அபிவிருத்தி உத்தியோகத்தர் 6
முகாமைத்துவ உதவியாளர் 4
அலுவலக உதவியாளர் 1

அபிவிருத்திப் பிரிவினால் மேற்கொள்ளப்படும் பணிகள்

- அரச வெசாக் உற்சவத்தை ஒழுங்கு செய்தல்
- சுதந்திர தின பிரித்போதனை மற்றும் சமய வழிபாட்டு நிகழ்வுகளை, நடாத்துதலும். ஒழுங்கு செய்தலும்.
- ஸ்ரீ சங்கமித்தா பிக்குணியின் ஞாபகார்த்த விழாவை ஒழுங்கு செய்தல்
- ஆன்மீக சிந்தனை மேம்பாட்டு நிகழ்வகளை ஒழுங்கு செய்தல்
- சாசனப் பாதுகாப்பு சபை தொடர்பான பணிகள்
- பிக்குணிமார்களின் கல்வி நிலையங்களை நிர்வகித்தல்
- பௌத்த அறநெறிப் பாடசாலைகளின் அபிவிருத்தியின் பொருட்டு நிதியுதவிகளை வழங்குதல்
- சாசனப் பாதுகாப்பு சபைகளுக்கு தேவையான உபகரணங்களை பெற்றுக்கொடுத்தல்.
- பிக்குணிமார்களை திணைக்களத்தில் பதிவு செய்தல்.
- பிக்கணிமார்களுக்கான அடையாள அட்டைகளை விநியோகித்தல்.
- பிக்குணிமார்களின் ஆராமைகளைப் பதிவு செய்தல்.
- விகாரைகள்/ஆராமைகளின் நிர்வாக சபைகளை பதிவு செய்தல்.
- விகாரைகளின் செயற்குழுக்களை பதிவு செய்தல்.
- விகாரைகளின் சாசனப் பாதுகாப்புச் சபைகளை பதிவு செய்தல்.
- பிக்குமார்களின் காவி உடை மற்றும் பூஜைப் பொருட்களை விற்பனை செய்யும். வியாபார நிலையங்களை பதிவு செய்தல்.
- சிவபசவுக்கான நிதியுதவியைப் பெற்றுக்கொடுத்தல்.
- பிக்குமார்களின் ஈமைச் சடங்குகளுக்கு தேவையான நிதியுதவியைப் பெற்றுக்கொடுத்தல்.
- பெரஹராக்களுக்கு தேவையான நிதியுதவியைப் பெற்றுக்கொடுத்தல்.
- நூல்களைக் கொள்வனவ செய்யும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் தரமான பௌத்த நூல்களைக் கொள்வனவு செய்தல்.
- உபசம்பதா உற்சவங்களுக்க வருகை தரும் பிக்குமார்களுகான போக்கவரத்து செலவினைப் பெற்றுக் கொடுத்தல்.
- பிரதான மூன்று நிக்காயகளினதும் மகாநாயக்க தேரர்கள் பங்கு கொள்ளும் விழாக்களை ஒழுங்கு செய்தல்.
- கௌதம புத்த பகவான் இலங்கைக்கு வருகை தந்து 2600 வருடங்கள் பூர்த்தியாவதை முன்னிட்டு இடம்பெறும் விழாவை ஒழுங்கு செய்தல்.
- புனித தாது கண்காட்சி.
- செயலாற்றுகை அறிக்கை, மாதாந்த / காலாண்டு முன்னேற்ற அறிக்கையை தயாரித்தல்.

## 04.1 சில்மாதாக்கள் தொடர்பான பணிகள்


### 04.1.1. சில்மாதாக்களின் கல்வி நிலையங்களை அபிவிருத்தி செய்தல்.

நாடெங்கிலும் வாசம் செய்யும் பிக்குணிமார்கள் தமது கல்வித் தரத்தை மேம்படுத்திக் கொள்வதற்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக்கொடுக்கும் நோக்கில் சில்மாதாக்களுக்கான கல்வி நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளன. முலடியனை பியதாஸ ரத்நாயக்க ஞாபகார்த்த சில் மாதா பயிற்சி நிலையத்தில் 2018.02.08 தொடக்கம் 2018.02.25 திகதி வரை பிக்குணிமார்களுக்கான தியானப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டமொன்றும், 2018.02.24 ஆம் திகதி இரவு முழவதுமான பிரித்பொதனை நிகழ்வொன்றும் நடாத்தப்பட்டது. 2018 இல் 16 பிக்குணிமார்களின் பொருட்டான குறகிய கால கற்கை நெறியானது 2018.05.26 அம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. அத்துடன் பிக்குணிமார்களுக்கான பயிற்சி நிலையத்தின் நிர்வாகச் செலவின் பொருட்டு ரூ. 1.0 மில்லியன் நிதியும், பயிற்சி நிலையத்தின் சுற்று மதில் நிர்மாணத்தின் பொருட்டு ரூ. 2.0 மில்லியன்கள் நிதியும் பெற்றுக் கொடுக்கப்பட்டதுடன், சற்று மதலின் நிர்மாணப் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

2018 இற்கான குறகிய கால கற்கை நெறி

**பயிற்சி நிகழ்வு**






**பிரித் போதனை**









**நிர்மாணப் பணிகள் பூர்த்தி செய்யப்பட்ட பிக்குணிமார்களுக்கான பயிற்சி நிலையத்தின் சுற்று மதில்**

தற்போது களனி ஈரியவெட்டிய சில்மாதா தலைமையகத்தின் நிர்மாணப் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன் வர்ணப்புச்சுப் பணிகள், அலங்காரப் பணிகள் மற்றும் மின்விசை பாரந்தூக்கி பொருத்தும் பணிகள் என்பன இடம்பெற்று வருவதுடன், 2019 இல் இதனை திறந்து வைப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.
கல்வி கற்கும் மாணவர்களின் உபயோகத்தின் பொருட்டு நூலகத்திற்கு தேவையான நூல்களை கொள்வனவு செய்யும் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன், களனி மற்றும் அநுராதபுரம் கல்வி நிலையங்களுக்கான வெளிக்கள பேராசிரியர்களை இணைத்துக் கொண்டு கற்கை நெறிகளை ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. 2018.01.02 திகதியிடப்பட்ட அமைச்சரவைத்

தீர்மானத்திற்கமைய பிக்குணிமார்களுக்கான கல்வி நிலையங்களை அபிவிருத்தி செய்வதன் பொருட்டு ரூ. 15 மில்லியன்கள் நிதியுதியை பெற்றுக்கொடுப்பதற்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

**களனி பிக்குணிமார்களுக்கான கல்வி நிலையம்**










**புதிய சங்கமித்தாராமை**


## 04.1.2. சில் மாதாக்களை பதிவு செய்தல் மற்றும் அடையாள அட்டைகளை வழங்குதல்

பௌத்த மத அலுவல்கள் திணைக்களத்தில் சில்மாதாக்களை பதிவு செய்தல் மற்றும் அவர்களுக்கான அடையாள அடடைகளை வழங்குதல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதுவரை இந்த திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள பிக்குணிமார்களின் எண்ணிக்கை 2027 ஆகும். வரைபு கீழே காட்டப்பட்டுள்ளது.




## 04.1.3 சில்மாதாக்களின் ஆராமைகளை பதிவு செய்தல்

இதுவரை இலங்கையில் பதிவு செய்யப்பட்ட சில்மாதா ஆராமைகளின் எண்ணிக்கை கீழுள்ளவாறாகும்




## 04.1.4 தேசிய சில்மாதா சங்கம்

இதன் கீழ் சில்மாதாக்குளுக்கான கூட்டங்களை நடாத்துதல், அவற்றை ஒழுங்கு செய்தல் மற்றும் அவர்களுக்கான போக்குவரத்து செலவுகளை வழங்குதல் போன்ற பணிகள் முனனெடுக்கப்படுகின்றன. அத்துடன் 2018 இல் 03 தேசிய சபை கூட்டங்களும் 01 செயற்குழு கூட்டமும் நடாத்தப்பட்டுள்ளது. மாவட்ட சில்மாதா சங்க கூட்டங்களுக்கு தேவையான நிதி வழங்கப்பட்டுள்ளது.

**04.2. பௌத்த சமய எழுத்தாளர்களை ஊக்குவித்தல் பௌத்த அறிஞர்களை**

**கௌரவித்தல்.**

உள்நாட்டு சிற்பக்கலையை மேம்படுத்துவது பௌத்த மத அலுவல்கள் திணைக்களத்தின் நோக்கமாகையால், இலங்கையின் தனித்தவத் தன்மையை பிரதிபலிக்கக் கூடிய வகையில் இதனை ஊக்குவிப்பதன் பொருட்டு திணைக்களமானது ஈடுபாட்டுடன் இதனை முன்னெடுத்து வருகின்றது. இதற்கமைய பௌத்த அறிஞர்களை கௌரவிப்பதற்கென 09 பிரதேச செயலகங்களுக்கும், கலை கலாசார நிகழ்வுகளை ஊக்குவிப்பதன் பொருட்டு 32 பிரதேச செயலகங்களுக்கும் நிதியுதவி வழங்கப்பட்டது.

### 04.3. **அறநெறிப் பாடசாலைகளுக்கு தேவையான வசதிகளைப் பெற்றுக்கொடுத்தல்**

### 04.3.1 அறநெறிப் பாடசாலை கட்டிடங்கள் மற்றும் உபகரணங்களுக்கான நிதியுதவி

புதிய அறநெறிப் பாடசாலை கட்டிடங்களை நிர்மாணிப்பதற்கு அல்லது புனரமைப்பிற்கென பொருத்தமான பௌத்த அறநெறிப் பாடசாலை ஒன்றிற்கு ஆகக் கூடிய உதவித் தொகையாக ரூ. 200,000.00 உம், அறநெறிப் பாடசாலைகளுக்கு தேவையான மேசைகள், இருக்கைகள் மற்றும் அத்தியாவசிய உபகரணங்களை கொள்வனவு செய்யும் பொருட்டு ரூ. 100,000.00 உம் ஆகக்கூடியவாறு வசதி குறைந்த அறநெறிப் பாடசாலைகளை அபிவிருத்தி செய்யும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ், புத்தசாசன அமைச்சின் தெரிவுக்குழுவினால் தெரிவு செய்யப்பட்ட 134 அறநெறிப் பாடசாலைகளை புனரமைப்பு செய்யும் முகமாக ரூ. 23,200,000.00 நிதியானது குருணாகல் மாவட்ட செலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. அத்துடன் அறநெறிப் பாடசாலைகளை புனரமைப்பு செய்யும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மாத்தளை மாவட்டத்தின் யட்டவத்தை பிரதேச செயலகப் பிரிவில் அமைந்துள்ள ஒரு அறநெறிப் பாடசாலையின் பொருட்டு ரூ. 94,000.00 நிதி பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளது.

### 4.4. **விகாரைகளின் நிர்வாக சபைகள், செயற்குழுக்கள் மற்றும் சாசனப் பாதுகாப்பு சபைகளை பதிவு செய்தல்.**

| தொடர் இல. | மாவட்டம் | விகாரை நிர்வாக குழுக்களின் எண்ணிக்கை | பிக்குணி ஆராமைகளின் நிர்வாக குழுக்களின் எண்ணிக்கை | விகாரை செயற்குழுக்களின் எண்ணிக்கை | விகாரை சாசனப் பாதுகாப்பு சபைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| 1 | கொழும்பு | 148 | 10 | 358 | 24 |
| 2 | களுத்துறை | 194 | 08 | 284 | 60 |
| 3 | கம்பஹா | 244 | 18 | 233 | 47 |
| 4 | காலி | 287 | 06 | 293 | 65 |
| 5 | மாத்தறை | 252 | 07 | 297 | 53 |
| 6 | அம்பாந்தோட்டை | 216 | 10 | 190 | 44 |
| 7 | குருணாகல் | 682 | 31 | 227 | 18 |
| 8 | புத்தளம் | 131 | 02 | 72 | 18 |
| 9 | கண்டி | 325 | 14 | 410 | 66 |
| 10 | மாத்தளை | 100 | 03 | 152 | 9 |
| 11 | மட்டக்களப்பு | 05 | 0 | 1 | 0 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 12 | மன்னார் | 03 | 0 | 0 | 3 |
| 13 | கிளிநொச்சி | 0 | 0 | 0 | 0 |
| 14 | நுவரெலியா | 142 | 4 | 87 | 27 |
| 15 | மொனராகலை | 110 | 03 | 108 | 45 |
| 16 | பதுளை | 155 | 05 | 169 | 16 |
| 17 | கேகாலை | 255 | 19 | 291 | 116 |
| 18 | இரத்தினபுரி | 255 | 08 | 219 | 75 |
| 19 | திருகோணமலை | 30 | 0 | 34 | 1 |
| 20 | அநுராதபுரம் | 218 | 13 | 257 | 15 |
| 21 | பொலன்னறுவை | 110 | 09 | 100 | 1 |
| 22 | ஆம்பாறை | 26 | 0 | 84 | 11 |
| 23 | வவுனியா | 21 | 0 | 5 | 0 |
| 24 | முல்லைத்தீவு | 01 | 0 | 1 | 0 |
| 25 | யாழ்ப்பாணம் | 05 | 0 | 0 | 0 |
| | மொத்தம் | 3915 | 170 | 3872 | 714 |

## 04.5. சாசனப் பாதுகாப்புச் சபைகளின் செயற்பாடுகளை ஊக்குவித்தல்

### 04.5.1. சாசனப் பாதுகாப்புச் சபைகளுக்கான வசதிகளை வழங்குதல்

நாட்டில் 322 பிரதேச சானப் பாதுகாப்புச் சபைகள் காணப்படுகின்றன. 22 மாவட்டங்களில் இயங்கி வரும் இவற்றின் செயற்பாடுகளுக்கு தேவையான இதன்போது வழங்கப்படுகின்றது. இவற்றின் கீழ் விகாரையின் சாசனப் பாதுகாப்புச் சபை மற்றும் பௌத்த அறநெறிப் பாடசாலைகள் என்பன இயங்கி வருகின்றன. கிராம மட்டத்தில் இடம்பெறும் அபிவிரத்திப் பணிகளும் இச்சபைகளின் ஊடாக மேற்கொள்ளப்படுகின்றன.

| தொடர் இல. | மாவட்டம் | மாவட்ட செயலகம் / பிரதேச செயலகம் | வழங்கப்படும் உபகரணம் | ஒதுக்கப்பட்ட நிதி | மாவட்ட ரீதியாக ஒதுக்கப்பட்ட நிதி |
|---|---|---|---|---|---|
| 1 | குருணாகல் | மாவட்ட செயலகம் | கணனி/ அச்சு இயந்திரம் | 105,000.00 | |
| 2 | | பன்னலை | கணனி/ அச்சு இயந்திரம் | 105,000.00 | |
| 3 | | பொலகஹவெலை | கணனி/ அச்சு இயந்திரம் | 105,000.00 | |
| 4 | | மாஸ்பொத | கணனி/ அச்சு இயந்திரம் | 105,000.00 | |
| 5 | | பமனாகொடுவை | கணனி/ அச்சு இயந்திரம் | 105,000.00 | 1,183,000.00 |
| 6 | | நாரம்மலை | கணனி / அச்சு இயந்திரம் | 105,000.00 | |
| 7 | | எஹட்டுவெவ | கணனி/ அச்சு இயந்திரம் | 105,000.00 | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 8 | | கல்கமுவை | கணனி / அச்சு இயந்திரம் / இரும்புக் கம்பி | 122,000.00 | |
| 9 | | பொல்பிதிகம | அலுவலக மேசை 02 / கதிரை 02 / இரும்பு அலுமாரி 01 / கணனி மேசை 01 / கணனி கதிரை 01 | 91,000.00 | |
| 10 | | கொட்டவெஹெர | அலுவலக மேசை 02 / கதிரை 02 / இரும்பு அலுமாரி 01 / கணனி மேசை 01 / கணனி கதிரை 01 | 84,000.00 | |
| 11 | | பிங்கிரிய | அலுவலக மேசை 02 / கதிரை 02 / இரும்பு அலுமாரி 01 / கணனி மேசை 01 / அச்சு இயந்திரம 01 | 98,000.00 | |
| 12 | | குருணாகல் | அலுவலக மேசை 01 / கதிரை 01 / இரும்பு அலுமாரி 01 / கணனி மேசை 01 / அச்சு இயந்திரம 01 | 53,000.00 | |
| 13 | இரத்தினபு ரி | கலவானை | அலுவலக மேசை 02 / கதிரை 02 / இரும்பு அலுமாரி 01 / கணனி மேசை 01 / அச்சு இயந்திரம் 01 | 60,000.00 | |
| 14 | | எம்பிலிப்பிட்டிய | அச்சு இயந்திரம் 01 | 15,000.00 | |
| 15 | | கஹவத்தை | அலுவலக கதிரை 01 | 8,000.00 | 129,000.00 |
| 16 | | குருவிட்டை | அலுவலக மேசை 02 / கதிரை 02 | 46,000.00 | |
| 17 | அநுராதபுர ம் | மிகிந்தலை | கணனி / அச்சு இயந்திரம் | 105,000.00 | |
| 18 | பதுளை | பதுளை | கணனி / அச்சு இயந்திரம் | 105,000.00 | 105,000.00 |
| 19 | | பஸ்ஸறை | கணனி / அச்சு இயந்திரம் | 105,000.00 | |
| 20 | | ஹல்தும்முல்லை | கணனி / அச்சு இயந்திரம /கணனி மேசை 01 | 115,000.00 | |
| 21 | | ஹப்புத்தளை | கணனி / அச்சு இயந்திரம் | 105,000.00 | 540,000.00 |
| 22 | | மீகஹகிவுலை | கணனி / அலுவலக மேசை 01 | 110,000.00 | |
| 23 | | | கணனி / அச்சு இயந்திரம் | 105,000.00 | |
| 24 | | | கணனி / அச்சு இயந்திரம் | 105,000.00 | 210,000.00 |
| 25 | | | கணனி | 90,000.00 | |
| 26 | | | அச்சு இயந்திரம் 01 | 15,000.00 | 105,000.00 |
| 27 | | | கணனி / அச்சு இயந்திரம் | 105,000.00 | |
| 28 | | | கணனி / அச்சு இயந்திரம் | 105,000.00 | |
| 29 | | | கணனி / அச்சு இயந்திரம் | 105,000.00 | 315,000.00 |
| 30 | | | கணனி | 90,000.00 | 90,000.00 |
| 31 | | | அச்சு இயந்திரம் 01 | 15,000.00 | 15,000.00 |
| 32 | | | கணனி / அலுவலக மேசை 01 / கதிரை 01 | 113,000.00 | 113,000.00 |
| 33 | | | கணனி / அச்சு இயந்திரம் | 105,000.00 | 105,000.00 |
| 34 | | | கணனி | 90,000.00 | 90,000.00 |
| | | | மொத்த நிதி | 3,000,000.0 0 | 3,000,000.00 |

#### 04.5.2. சாசனப் பாதுகாப்புச் சபைகளின் செலவுகளை ஏற்றுக்கொள்ளல்

இதன் போது சாசனப் பாதுகாப்புச் சபைகளின் கூட்டங்களை நடாத்துதல் அவற்றை ஒழுங்கு செய்தல் மற்றும் அவற்றில் கலந்து கொள்ளுதல், பிக்குமார்களின் போக்குவரத்து செலவுகளை வழங்குதல் போன்றன இடம்பெறுகின்றன. 2018 இல் 07 செயற்குழு உறுப்பினர்களுக்கான கூட்டங்களும் 02 அகில இலங்கை சாசனப் பாதுகாப்புச் சபை கூட்டங்களும் நடாத்தப்பட்டன. அனைத்து மாவட்ட மற்றும் பிரதேச சாசனப் பாதுகாப்பச் சபை உறுப்பினர்களுக்குமான போக்குவரத்து செலவுகளுக்குரிய கொடுப்பனவுகள் பெற்றுக்கொடுக்கப்படுகின்றன. மேலும் மேல், வடமேல் மற்றும் சப்பிரகமுவா மாகாண பிரதேச சாசனப் பாதுகாப்புச் சபைகளின் வண. தலைவர் பிக்குமார்களுக்கும் வண. செயலாளர் பிக்குமார்களுக்குமான இரண்டு நாட்கள் தெளிவுபடுத்தல் நிகழ்வுகள் மூன்றும் நடாத்தப்பட்டுள்ளன.

## 04.6. தேசிய உற்சவங்களை ஒழுங்கு செய்தல்

#### 04.6.1. தேசிய சுதந்திர தின பிரித் போதனை வைபவம்

2018 பெப்ரவரி மாதம் 02 ஆம் திகதி கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் இடம்பெற்ற இரவு முழுவதுமான பிரித்போதனை நிகழ்வானது இலங்கை ராமக்ஞ நிக்காயவின் அதி வணக்கத்திற்குரிய மகாநாயக்க தேரர், சிறி சீலவங்ஸ வங்ஸாலங்கார திரிபிடக வாகீஷ்வராசார்ய அக்கமகா பண்டித வினயாசார்ய வினய விஷாரத திரிபிடக தர்ம சக்ரவர்த்தி அதி வண. நாபான பேமசிறி தேரர் அவர்களின் வழிகாட்டலின் கீழ் கொழும்பு 10, மருதானை ஸ்ரீ வித்யால பிரிவெனா விகாராதிபதி வண. மெதகம நந்தவங்ஸ தேரர் அவர்களின் தலைமையில் ஏனைய வண. பிக்குமார்களினால் நிகழ்த்தப்பட்டது. இந்நிகழ்வில் கௌரவ உள்நாட்டலுவல்கள் அமைச்சர் வஜிர அபேவர்தன அவர்கள், கௌரவ புத்தசாசன அமைச்சர் காமிணீ ஜயவிக்ரம பெரேரா அவர்கள், அமைச்சர்கள். பாராளுமன்ற உறுப்பினர்கள், அரச அதிகாரிகள் பௌத்த அடியார்கள் மற்றும், ஏனைய அதிதிகளும் கலந்து கொண்டனர்.

#### 04.6.2 தேசிய சுதந்திர தின சமய நிகழ்வுகள்

2018 பெப்ரவரி மாதம் 04 ஆம் திகதி கொண்டாடப்பட்ட 70 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டான பௌத்த சமய நிகழ்வுகள் அதிகாலை 06.00 மணிக்கு கொழும்பு 03 இல் அமைந்துள்ள தர்மகீர்த்யாராமையில் (பொல்வத்தை விகாரை) வேதர மகிந்த நாயக்க தேரர் அவர்களின் தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பாராளுமன்ற கௌரவ சபாநாயகர் அவர்கள், கௌரவ புத்தசாசன அமைச்சர் காமிணீ ஜயவிக்ரம பெரேரா அவர்கள், அமைச்சர்கள். பாராளுமன்ற உறுப்பினர்கள், அரச அதிகாரிகள் பௌத்த அடியார்கள் மற்றும் , ஏனைய அதிதிகளும் கலந்து கொண்டனர்.





**04.6.3. தேசிய வெசாக் உற்சவம்**

ஸ்ரீ பு.வ. 2562 இன் அரச வெசாக் உற்சவமானது **“சித்தங் தந்தங் சுகா வஹங்”** (அமைதியான உள்ளம் இன்பத்தை தரும்) என்னும் தலைப்பின் கீழ் இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் மாண்புமிகு ஜனாதிபதி அவர்களின் தலைமையில் குருநாகல் மாவட்டத்தின் பிங்கிரிய பிரதேச செயலகப் பிரிவில் அமைந்துள்ள தேவகிரி ரஜமகா விகாரையில் இடம்பெற்றது.













**பௌர்ணமி தின சமய நிகழ்வுகள்**

**வெசாக் வார நிகழ்ச்சித்திட்டம் (2018.04.26 தொடக்கம் 2018.05.02)**

நாட்டின் அனைத்து பிரதேச செயலகங்களிலும் வெசாக் வாரத்தினை முன்னிட்டு கீழுள்ள தலைப்புகளின் கீழ் நிகழ்வுகள் முன்னெடுக்கப்பட்டன. அத்துடன் குருநாகல் மாவட்டத்தில் இந்த நிகழ்வுகள் ஜனவரி மாதம் தொடக்கம் நடைமுறைப்படுத்தப்பட்டதுடன் 2018.04.29 ஆம் திகதி பௌர்ணமி தின சமய நிகழ்வுகளும், 2018.04.26 ஆம் திகதி தொடக்கம் 2018.05.02 வரையிலான வெசாக் வார சமய நிகழ்வுகளும் மிகவும் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டன.

முதலாவது நாள் - சூழலும் புத்த தர்மமும்
இரண்டாவது நாள் - பௌரணமி தின சமய நிகழ்வுகள்
மூன்றாவது நாள் - சுகாதாரமும் புத்த தர்மமும்
நான்காவது நாள் - இலக்கியமும் புத்த தர்மமும்
ஐந்தாவது நாள் - கலையும் புத்த தர்மமும்
ஆறாவதுநாள் - தொழிலாளர்களம் புத்த தர்மமும்
ஏழாவது நாள் - சமூக அபிவிருத்தி, பொருளாதாரம் மற்றும் புத்த தர்மம்






அத்துடன் அரச வெசாக் உற்சவத்துடன் இணைந்ததாக குருநாகல் மாவட்டத்தில் கீழே குறிப்பிட்டுள்ளவாறான பல முன்னோடியான நிகழ்வுகள் பிரதேச செயலக மட்டத்தில் நடாத்தப்பட்டன.

| நிகழ்வின் பெயர் | நடாத்தப்பட்ட நிகழ்வுகளின் எண்ணிக்கை |
|---|---|
| **ஆன்மீக சிந்தனை மேம்பாட்டு நிகழ்வுகள்** | 84 |
| **நடமாடும் சேவைகள்** | 02 |
| **பௌத்த அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கான பயிற்சி நிகழ்வுகள்** | 16 |
| **சாமனேர பிக்குமார்களுக்கான பயிற்சி நிகழ்வுகள்** | 01 |
| **பிக்குணிமார்களுக்கான பயிற்சி நிகழ்வுகள்** | 03 |
| **பெற்றோர் மற்றும் பிள்ளைகளுக்கிடையில் உறவை வலுப்படுத்தும் வகையிலான நிகழ்வுகள்** | 29 |
| **சுகாதாரமும் புத்த தர்மமும் பற்றிய நிகழ்வுகள்** | 29 |
| **பிள்ளைகளுக்கான தியானப் பயிற்சி நிகழ்வுகள்** | 29 |

| | |
|---|---|
| தொழிலாளர்களம் புத்த தர்மமும் | 10 |
| பௌத்த குறு நாடகப் போட்டிகள் | பிரதேச மற்றும் மாவட்ட மட்டப் போட்டிகள் நடாத்தி முடிக்கப்பட்டுள்ளன. |
| பக்திப் பாடல் நிகழ்வுகள் | பிரதேச மற்றும் மாவட்ட மட்டப் போட்டிகள் நடாத்தி முடிக்கப்பட்டுள்ளன. |
| புத்த தர்மத்தினால் வளர்க்கப்பட்ட சிங்கள இலக்கியம் மற்றும் கலை | 30 |
| ஒழுக்க விழிப்புணர்கள் பற்றிய வீதி ஊர்வலங்கள் | 09 |
| வலுவான சூலழுக்கு புத்த தர்மத்தின் படிப்பினைகள் | 04 |
| விசேட தர்ம போதனைகள் மற்றும் பிண்டபாத(பிக்ஷாடனம்) புண்ணிய கருமம் | 05 |
| சமூக அபிவிருத்தி மற்றும் புத்த தர்மம் நிகழ்ச்சித்திட்டம் | 01 |

### 04.6.4 நியமணப் பத்திரங்களை கையளித்தல்

இலங்கை அமரபுர நிக்காயவின் தலைவர் அதிவணக்கத்திற்குரிய கநடதுனே அஸ்ஸஜீ மகாநாயக்க தேரர் அவர்களுக்கான நியமணப் பத்திரம் கையளிக்கும் வைபவம் 2018 மார்ச் மாதம் 27 ஆம் திகதி பண்டாரநாயக்க ஞாபகார்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் மாண்புமிகு ஜனாதிபதி மைத்திரிபால சிரிசேன அவர்களின் தலைமையில் இடம்பெற்றது.





### <u>04.6.5. சங்கமித்தா ஞாபகார்த்த உற்சவம்</u>

2326 ஆவது சங்கமித்தா ஞாபகார்த்த விழா மற்றும் உற்சவம் என்பன 2018 டிசம்பர் மாதம் 22 மற்றும் 23 ஆம் திகதிகளில் அநுராதபுரத்தில் சிறப்பாக இடம்பெற்றது. இதனுடன் இணைந்த வகையிலான சமய போதனை நிகழ்வு ஒன்று அரிப்பு வீதியில் அமைந்துள்ள சங்கமித்தாராமையில் அகில இலங்கை பிக்குணிமார்களின் சங்கத்தினைச் சேர்ந்த பிக்குணிமார்களால் நடாத்தப்பட்டது.









**04.7 உபசம்பதா உற்சவங்களுக்கான நிதியுதவி வழங்குதல்**

ஒவ்வொரு நிக்காயகளினதும் பதிவாளர் தேரர்களினால் வழங்கப்படும் விபரங்களுக்கமைய இடம்பெறும் உபசம்பதா புண்ணிய கருமத்தின் போது குறித்த பகுதியின் பிரதேச செயலாளர்களின் கண்காணிப்பின் கீழ் போக்குவரத்துச் செலவுகள் வழங்கப்படும்.

| நிக்காய பிரிவு | பிக்குமார்களன் எண்ணிக்கை | வழங்கப்பட்ட போக்குவரத்துச் செலவு |
|---|---|---|
| ஸ்யாமோபாளி வம்ச மகா நிக்காயவின் ஸ்ரீ ரோஹண பிரிவு | 34 | 102,000.00 |
| ஸ்யாமோபாளி வம்ச மகா நிக்காயவின் அஸ்கிரி மல்வத்து மகா விகாரை பிரிவு | 360 | 1,080,000.00 |
| ஸ்யாமோபாளி வம்ச வனவாச பிரிவு | 63 | 189,000.00 |
| ஸ்ரீ கல்யாணிவங்ஸ நிக்காய | 20 | 60,000.00 |
| மலை நாட்டு அமரபுர பிரிவு | 30 | 90,000.00 |
| இலங்கை ராமக்ஞ நிக்காய | 479 | 1,437,000.00 |
| அமரபுர ஸ்ரீ சத்தம்ம வங்ஸ மகா நிக்காய | 68 | 204,000.00 |
| சப்பிரகமுவா அமரபுர சாமக்ரீ மகா சங்க சபை | 11 | 33,000.00 |
| **மொத்தம்** | **1065** | **3,195,000.00** |

**04.8. ஈமைச் சடங்குகளுக்கான செலவை மேற்கொள்ளுதல்**

இத்திட்டத்தின் கீழ் இறைபதம் எய்திய வணக்கத்திற்குரிய பிக்குமார்கள் மற்றும் பிக்குணிமார்களின் 172 ஈமைச் சடங்கு நிகழ்வுகளின் பொருட்டு நிதியுதவியானது பெற்றுக்கொடுக்கப்பட்டது.

### 04.09. சிவுபசவுக்கான நிதியுதவி வழங்குதல்

இந்த திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட மாவட்டங்களில் தெரிவு செய்யப்பட்ட பிரதேச செயலகப் பிரிவுகளில் அமைந்துள்ள விகாரைகளில் வாசம் செய்யும் “சிவுபச” நிதியுதவி கிடைக்கப்பெறாத பிக்குமார்களின் பொருட்டு வழங்கப்படுகின்றது. அதற்கமைய 2017 இல் நிதிப் பற்றாக்குறை காரணமாக நிதியுதவி வழங்கப்பட முடியாது போன விண்ணப்பப்படிவங்களுக்கான சிவுபச நிதியுதவிகள் 2018 இல் பெற்க்கொடுக்கப்பட்டன.

### 04.10. சலுகைக் கட்டண அடிப்படையில் விகாரைகளுக்கு தொலைபேசி, மின்சாரம், நீர் வசதியினைப் பெற்றுக் கொடுத்தல்

இதன் கீழ் சலுகைக் கட்டண அடிப்படையில் விகாரைகளுக்கு தேவையான தொலைபேசி, மின்சாரம், நீர் வசதியினை வழங்குவதற்குத் தேவையான சிபாரிசுகள் பெற்றுக்கொடுக்கப்படுகின்றது. அதற்கமைய இத்திட்டத்தின் கீழ் 10 விகாரைகளுக்கான சிபாரிசுகள் பெற்றுக்கொடுக்கப்பட்டது.

### 04.11. 2019 இல் மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படும் நிகழ்ச்சித்திட்டங்கள்


i. முலடடியனை பியதாஸ ரத்நாயக்க பிக்குணிமார் பயிற்சி நிலையத்தில் குறகிய் கால மற்றும் நீண்ட கால கற்கைநெறிகளை முன்னெடுத்தல்.

ii. பிக்குணிமார்களை பதிவு செய்தல் மற்றும் அவர்களுக்கான அடயாள அட்டைகளை விநியோகித்தல்.

iii பிக்குணிமார்களின் ஆராமைகள் மற்றும் நிர்வாக சபைகளை பதிவு செய்தல்.

iv தேசிய பிக்குணிமார் சபை கூட்டங்கள் - 06

# கருத்திட்டப் பிரிவு


பௌத்த மத அலுவல்கள் ஆணையாளர்
பிரிவுப் பொறுப்பாளர்
அபிவிருத்தி உத்தியோகத்தர் 4
அலுவலக உதவியாளர் 1

## 05.1 அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களின் ஆற்றல்களை மேம்படுத்தும் பயிற்சி நிகழ்வுகள்

அறநெறிப் பாடசாலை ஆசிரியர் சேவையில் இணைந்தகொள்பவர்கள் பெரும்பாலும் கல்விப் பொது தராதர (சா/தரம்) பரீட்சைக்கு தோற்றியவர்களாகவே காணப்படுகின்றனர். அவர்கள் திருமணம், தொழில், உயர் கல்வியில் ஈடுபடுதல் போன்ற பல்வேறு விடயங்களின் காரணமாக அறநெறி கற்பித்தல் சேவையிலிருந்து விலகுவதுடன், வேறொரு புதிய தரப்பினர் அச்சேவையில் இணைந்துகொள்கின்றனர். அத்துடன் இவ்வாறு சேவையில் இணைந்துகொள்ளும் அனைவரும் அனுபவம் இல்லாதவர்களாகவே காணப்படுகின்றனர். எனவே இவர்களை ஆசிரியர் சேவைக்கு ஏற்றவகையில் பயிற்றுவிக்க வேண்டிய தேவை ஏற்படுகின்றது. அதேபோன்று மாணவர்களுடன் பணியாற்றும் போது அவர்களின் மனநிலைகளுக்கு ஏற்ப செயற்பட வேண்டியது அத்தியாவசியமான விடயமாகும். இல்லையேல் அதனால் வேறு விளைவுகளைச் சந்திக்க நேரிடும். இந்த விடயங்களை அடிப்படையாகக் கொண்டு அறநெறிப் பாடசாலை ஆசிரியரின் கல்வியறிவு, சிந்தனை, திறமைகள் என்பவற்றை மேம்படுத்தும் கருத்திட்டமாகவே, அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களின் ஆற்றல்களை மேம்படுத்தும் பயிற்சி நிகழ்வுகள் திட்டமிடப்பட்டுள்ளன. இதன் மூலம் அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களின் சேவையை மேம்படுத்துவதுடன் அறநெறிக் கல்வியின் தரத்தை மேம்படுத்துவதற்கும் உத்தேசிக்கப்படுகின்றது.

2018 இல் இக்கருத்திட்டத்திற்கென ரூ. 4500,00.00 நிதியானது ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதற்கமைய 05 மாவட்டங்களில் 32 பயிற்சி நிகழ்வுகள் நடாத்தப்பட்டுள்ளன. இதன் மூலம் பயிற்றுவிக்கப்பட்ட ஆசிரியர்களின் எண்ணிக்கை 6800 ஆகும். இதற்கான செலவு ரூ. 557,9480.00 ஆகும்.

தஹம் சரசவிய புத்தர்ம டிப்ளோமா உயர்கல்வி கற்கைநெறி (முதலாம் வருடம் -2018)

2018 இற்கென ஒதுக்கப்பட்டுள்ள நிதி. ரூ.7,000,000/-

**2018.12.31 வரையான செலவு விபரம்**

- 2018.03.24 ஆம் திகதி 19 மாவட்ட செயலகங்களின் கண்காணிப்பின் கீழ் 26 நிலையங்களில் தஹம் சரசவிய புத்தர்ம டிப்ளோமா உயர்கல்வி, டிப்ளோமா கற்கை நெறியானது (முதலாம் வருடம்) ஆரம்பிக்கப்பட்டது.
- கற்கை நெறியின் ஆரம்ப நிகழ்வின் போதான உபசரிப்புச் செலவுகளின் பொருட்டு ஒரு மாவட்ட செயலகத்திற்கு ரூ.3000/= வீதம் 19 மாவட்ட செயலகங்களுக்கு ரூ.57,000/= தரப்பட்டுள்ளது.
- கற்கை நெறியின் பாடவிதானங்களை உள்ளடக்கிய சுமார் 4000 நூல்கள் தயாரிக்கபட்டு கற்கை நெறியில் இணைந்துள்ள ஆசிரியர்களுக்கு வழங்கும் முகமாக உரிய மாவட்ட செயலகங்களுக்கு பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளன.
- 2018.03.16 ஆம் திகதி கொழும்பு 07 பௌத்தலோக்க மாவத்தையில் அமைந்துள்ள ஸ்ரீ லங்கா பௌத்த மற்றும் பாளி பல்கலைகழகத்தின் பிரதான கேட்போர் கூடத்தில்

வளவாளர்களுக்கான வழிகாட்டல் நிகழ்வு இடம்பெற்றது. இதன் போது வளவாளர்களுக்கான நியமனக் கடிதங்களும் வழங்கப்பட்டன.

- கற்கை நெறி நடைபெறம் நிலையங்களின் அடிப்படை வசதிகளை மேம்படுத்தும் முகமாக ஒரு மாதத்திற்கு ரூ.1500/= வீதம் 08 மாதங்களுக்கு ரூ.12000/= நிதியானது ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு ஒதுக்கீடு செய்யப்பட்ட மொத்தப் பெறுமதி ரூ.312,000/= ஆகும்.
- கற்கை நெறியினை முன்னிட்டு பௌத்த மற்றும் பாளி பல்கலைக்கழகத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட திருத்தப்பட்ட உத்தேச செலவு மதிப்பீட்டு அறிக்கைக்கு அமைய ரூ.3,872,250/= நிதியானது அனுமதிக்கப்பட்டுள்ளது.
- 26 நிலையங்களில் பணியாற்றும் வளவாளர்களின் பொருட்டு உரிய மாவட்ட மற்றும் பிரதேச செயலகங்களுக்கு ரூ.2,340,000/= நிதியானது ஒதுக்கப்பட்டுள்ளது.
- 2019 இல் நடைமுறைப்படுத்தப்படவுள்ள தஹம் சரசவிய புத்த தர்ம டிப்ளோமா உயர்கல்வி கற்றை நெறியின் இரண்டாவது வருடத்திற்கான உத்தேச செலவு மதிப்பீட்டு அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. அதன் மொத்த மதிப்பீடு ரூ.12,679,500/= ஆகும்.
- 2016 தஹம் சரசவிய புத்த தர்ம டிப்ளோமா உயர்கல்வி கற்கை நெறிக்குரிய பரீட்சைகள் 2017 செப்டெம்பர் மாதம் 23,24 மற்றும் 30 ஆம் திகதிகளில் நடாத்தப்பட்டதுடன் அதன் பெறுபேறுகள் ஸ்ரீ லங்கா பௌத்த மற்றும் பாளி பல்கலைக்கழகத்தினால் வெளியிடப்பட்டுள்ளன. அதற்கமைய பரீட்சையில் சித்தி எய்தியவர்களின் எண்ணிக்கை 861ம், சித்தியடையாதவர்களின் எண்ணிக்கை 309ம் ஆகும்
- இக் கற்கை நெறியுடன் இணைந்ததாக ஒரு நாள் தியான பிரயோகப் பயிற்சி கற்கை நெறி ஒன்றும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதற்கென கம்பஹா/ கொழும்பு/ களுத்துறை/இரத்தினபுரி/கேகாலை ஆகிய மாவட்ட செயலகங்களுக்கு ரூ.256,000/= நிதியானது வழங்கப்பட்டுள்ளது. வளவாளர்களுக்கான கொடுப்பனவுகள், போக்குவரத்து செலவு கொடுப்பனவுகளுக்கென ரூ.32,400/= செலவிடப்பட்டுள்ளது. எரிபொருளுக்கான செலவு ரூ.17,000/= ஆகும்.
- ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தினால் 2018 ஆகஸ்ட் மாதம் 03,04 மற்றும் 05 ஆம் திகதிகளில் தஹம் சரசவிய டிப்ளோமா கற்கை நெறிக்கான பரீட்சையை மீண்டும் நடாத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்க் கொள்ளப்பட்டுள்ளன. 70 மாணவர்கள் இதில் கலந்து கொண்டுள்ளதுடன் அதற்கான செலவு மதிப்பீடான ரூ.1,184,405/= அனுமதிக்கப்பட்டுள்ளது. இந்த நிதியை 2015 இல் இக் கற்கை நெறியின் பொருட்டு ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்திற்கு வழங்கபட்டு அதில் எஞ்சிய தெதாகையான ரூ.1,940,717.60 நிதியில் இருந்து ஈடுசெய்து கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.
- கற்கை நெறியில் இணைந்துள்ள அறநெறிப் பாடசாலைகளுக்கான பாடத்திட்ட விடயங்கள் அடங்கிய கைநூல்களை பௌத்த மத அலுவல்கள் திணைக்களத்தினால் அச்சிட்டு வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன் அத்தகைய 15,000 நூல்களை அச்சிடுவதற்கான மொத்தச் செலவு ரூ.989,000.00/= நிதியானது அரச அச்சகத்திற்கு வழங்கப்பட்டுள்ளன.
- 2018 ஆம் வருடத்திற்கான கற்கை நெறியின் பொருட்டு ஸ்ரீ லங்கா பௌத்த மற்றும் பாளி பல்கலைக்கழகத்திற்கு செலுத்தப்பட வேண்டிய எஞ்சிய நிதியான ரூ.1,472,250/= ஐ செலுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

அதற்கமைய ஸ்ரீ லங்கா பௌத்த மற்றும் பாளி பல்கலைக்கழகத்திற்கு செலுத்தப்பட வேண்டிய மொத்தக் கொடுப்பனவுகளும் செலுத்தி முடிக்கப்பட்டுள்ளன.

- 2019.01.12,13,19 ஆகிய திகதிகளில் நடாத்தப்படவிருந்த தஹம் சரசவிய டிப்ளோமா பரீட்சைக்கான செலவுத் தொகையான ரூ. 401,900.00/= நிதியானது 13 மாவட்ட செயலகங்களுக்கு பெற்றுக் கொடுப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்க் கொள்ளப்பட்டுள்ளன.
- ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தினால் நடாத்தப்பட்ட டிப்ளோமா கற்கை நெறியாளர்கள் 100 பேருக்கான டிப்ளோமா, சான்றிதழ் வழங்கும் வைபவமானது 2019.01.20 ஆம் திகதி நடாத்துவதற்கு தேவையான ஆயத்தங்கள் மேற்க் கொள்ளபட்டுள்ளதுடன் அதற்கான செலவுத் தொகையான ரூ.204,750/= நிதியானது வழங்கப்பட்டுள்ளது.

## திரிபீடக நூல்களை அச்சிடுதல்

*சமுத்திரதா ஜயந்தி சிங்கள டிரிபிகொட தொடரின் முடிவடைந்தபின்இ 1993 ஆம் ஆண்டில் வாசகரின் பதிலுக்கு விடையளித்த உரை புத்தகம் தொடங்கப்பட்டது. அதன்படிஇ 2018 ஆம் ஆண்டில்இ புத்த ஜெயந்தி சுத்து அபிஷேக் சிங்கப்பூர் புத்தக 33 ஒரு எளிய வடிவத்தில் அச்சிடப்பட்டு 27 புத்தகங்களாக அச்சிடப்படும். அபிதாம்மா பீட்டயாவின் இரண்டு புத்தகங்களில் வேலை நடைபெறுகிறது.*

**2018 இற்கான ஒதுக்கப்பட்டுள்ள நிதி ரூ. 3,500,000/=**

*ஒரு உற்சாகமான மொழியில் திரிபிகா எழுதும்.*

*சமுத்திரதா ஜயந்தி சிங்கள டிரிபிகொட தொடரின் முடிவடைந்தபின், 1993 ஆம் ஆண்டில் வாசகரின் பதிலுக்கு விடையளித்த உரை புத்தகம் தொடங்கப்பட்டது. அதன்படி, 2018 ஆம் ஆண்டில், புத்த ஜெயந்தி, சுட்டுபத்தக சிங்களம் புத்தக 33, அமைதியான முறையில் தயாரிக்கப்பட்டு, 27 புத்தகங்கள் அச்சிடப்பட்டது. அபிதாம்மா பீட்டயாவின் இரண்டு புத்தகங்களில் வேலை நடைபெறுகிறது.*

| | |
|---|---|
| ➢ அனுமதிக்கப்பட்ட கொடுப்பனவுகளுக்கு | ரூ. 1,490,000/- |
| ➢ உணவு பரிமாறல்களுக்கு | ரூ. 312,140.56 |
| ➢ நூல்களை தொகுக்கும் செயற்பாடுகளுக்கு | ரூ. 1,049,375.00 |
| மொத்தம் = | ரூ. **.2,851,515.56** |

### அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கான அடையாள அட்டை தயாரித்தல்

பரம்பரை பரம்பரையாக புனித தர்மத்தின் சாரத்தைப் பேணிப் பாதுகாக்கும் இடம் அறநெறிப் பாடசாலை ஆகும். புத்த தர்மத்தின் கொள்கைகளை பின்பற்றும் சமூகத்தை தோற்றுவிக்கும் நோக்கத்துடன் எவ்வித பலனையும் எதிர்பார்க்காது கடமையாற்றும் அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களை ஊக்குவிக்கும் முகமாகவும் அவர்களுக்கு சமூகத்தில் நல்லதொரு அந்தஸ்தினை பெற்றுக்கொள்ளும் பொருட்டு அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கான அடையாள அட்டைகள் விநியோகிக்கப்பட்டன. 2017 ஒகஸ்ட் மாதம் வரை இத்தகைய 1640 அடையாள அட்டைகள் ரூ.1,31,710.32/= செலவில் தயாரிக்கப்பட்டுள்ளன.

2019 இல் மேற்கொள்ளப்படவிருக்கும் நிகழ்ச்சித்திட்டங்கள்

**1. எதிர்பார்க்கப்படும் நிகழ்ச்சித்திட்டங்கள்**

I. திரிபீடக தொகுப்பு சபை கூட்டங்கள் - 07

II. அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களின ஆற்றல் மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டங்கள் - 29

III. அறநெறிப் பாடசாலைக்குரிய 10 புதிய நூல்களை தொகுப்பதற்கான குழுவினரின் கூட்டங்கள் - 12

IV. புத்தரஸ்மி வெசாக் கண்காட்சி - அலரிமாளிகை

V. அறநெறிப் பாடசாலை தினத்துடன் இணைந்த பௌத்த கண்காட்சி

**2. பரீட்சைகள்**


I. தஹம் சரசவிய முதலாவது வருடத்திற்கான டிப்ளோமா பயிற்சி

(ஸ்ரீ லங்கா பௌத்த மற்றும் பாளி பல்கலைக்கழகம்) - 03

**பௌத்த மத அலுவல்கள் திணைக்களத்தின் கருத்திட்ட பிரிவினரால் மேற்கொள்ளப்படும் நிகழ்ச்சித்திட்டமிடல் - 2019**

| வருடம் | நிகழ்ச்சித்திட்டம் | நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 2019 | அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களின் ஆற்றல் மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டங்கள் | 29 |
| | அறநெறிப் பாடசாலைகளுக்குரிய 10 புதிய நூல்களை தொகுப்பதற்கான குழுவினரின் கூட்டங்கள் | 13 |
| | திரிபீடக தொகுப்பு சபை கூட்டங்கள் | 06 |
| | தஹம் சரசவிய முதலாவது வருடத்திற்கான டிப்ளோமா பயிற்சி (ஸ்ரீ லங்கா பௌத்த மற்றும் பாளி பல்கலைக்கழகம்) | 03 |
| | புத்தரஸ்மி வெசாக் கண்காட்சி - அலரிமாளிகை | 01 |

# பிக்குமார்களை பதிவு செய்யும் பிரிவு



### 06.1. சாமனேர உபசம்பதா சான்றிதழ்களை விநியோகித்தல் மற்றும் பிக்குமார்களுக்கான அடையாள அட்டைகளை விநியோகித்தல்

இப்பிரிவினால் வழங்கப்படும் சேவைகள்

- புதிய சாமனேர உறுதிப் பத்திரங்களை பதிவு செய்தல்
- புதிய உபசம்பதா உறுதிப் பத்திரங்களை பதிவு செய்தல்
- துறவறத்திலிருந்து விலகிச் சென்றமைக்கான அத்தாட்சி சான்றிதழ்களை விநியோகித்தல்
- சாமனேர மற்றும் உாசம்பதா உறுதிமொழிப் பத்திரங்கள் தேவையான திருத்தங்களை மேற்கொள்ளுதல்
- பதிவு செய்யப்பட்ட சாமனேர மற்றும் உபசம்பதா உறுதிமொழிப் பத்திரங்களுக்கான சான்றிதழ்களை விநியோகித்தல்
- சாமனேர, மற்றும் உபசம்பதா தகவல்களை அன்றாடம் கணனிப்படுத்தல்
- சட்ட ரீதியான பிரச்சினைகளின் போது தேவையான சாட்சிகளை வழங்குதல்


<u>**2018.01.01 தொடக்கம் 2018.08.31 வரை**</u>

| | |
|---|---|
| பதிவு செய்யப்பட்ட சாமனேர பிக்குமார்களின் எண்ணிக்கை | - 2699 |
| பதிவு செய்யப்பட்ட உபசம்பதா பிக்குமார்களின் எண்ணிக்கை | - 1000 |
| துறவறத்தில் இருந்து விலகுவதற்கான அத்தாட்சி சான்றிதழ் விநியோகம் | - 968 |
| விநியோகிக்கப்பட்ட பிக்குமார்களுக்கான அடையாள அட்டைகளின் எண்ணிக்கை | - 378 |

அதே போன்று இப்பிரிவினால் சாமனேர மற்றும் உபசம்பதா பிக்குமார்களின் தகவல்களை கணனிமயப்படுத்துவதன் பொருட்டு கணனி மென்பொருள் ஒன்று நிர்மாணிக்கப்பட்டுள்ளது. இம்மென்பொருளின் மூலமாக இதுவரை 17,100 உபசம்பதா பிக்குமார்களின் விபரங்களும், 38,720 சாமனேர பிக்குமார்களின் விபரமும் தகவல் வலையமைப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இதன் மூலம் சாமனேர மற்றும் உபசம்பதா சான்றிதழ்களின் பொருட்டு விண்ணப்பிப்பவர்களுக்கு அவற்றை விரைவாக விநியோகிக்க முடிகின்றது.

# தகவல் தொழிநுட்ப பிரிவு



பௌத்த மத அலுவல்கள் திணைக்களத்தின் தகவல் பிரிவானது 2015 பெப்ரவரி 14 ஆம் திகதியே உத்தியோகபூர்வமாக நிறுவப்பட்டது. இருப்பினும் கடந்த பல வருடங்களாக தகவல் தொழிநுட்ப பிரிவினால் தகவல்கள் முறையாக தொகுக்கப்பட்டு வழங்கப்படுகின்றது.

தகவல்களை சேகரித்தல் மற்றும் புள்ளிவிபரங்களை தயாரித்தல் போன்றவை பௌத்த மத அலுவல்கள் திணைக்களத்தின் தகவல் தொழிநுட்ப பிரிவின் பிரதான பணியாகும். அதற்கமைய முறையாகத் தயாரிக்கப்பட்டு அரச மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு வழங்கப்படுகின்றன. இபிபரிவினால் கீழே குறிப்பிடப்பட்டுள்ள பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

### 07.1 தகவல் அறியும் உரிமைச்சட்டம்

2016 இன் 12 ஆம் இலக்க தகவல் அறியும் உரிமைச்சட்டத்திற்கமைய பல்வேறு தேவைகளின் பொரட்டு கிடைக்கப்பெறும் விண்ணப்பப்படிவங்களுக்கு ஏற்ப தகவல்கள் வழங்கப்படுகின்றன. அதற்கமைய 2018.12.31 ஆம் திகதி வரை 87 விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றுள்ளன.

### 07.2 விகாரைகள் பற்றிய விபரங்களை கணனிமயப்படுத்தல்

புத்தசாசன அமைச்சின் தகவல் தொழிநுட்ப பிரிவுடன் இணைந்து தகவல் முகாமத்துவ வலையமைப்பொன்று உருவாக்கப்பட்டுள்ளதுடன், இத்தகவல் வலையமைப்பிற்கு முறையாகத் தகவல்கள் தரவேற்றம் செய்யப்படுவதன் மூலம் விகாரை உரித்தாகும் நிக்காய பிரிவு, வாசம் செய்யும் பிக்குமார்களின் எண்ணிக்கை, அவர்களுக்கடையில் சாமனேர மற்றும் உபசம்பதா பிக்குமார்கள் பற்றிய விபரங்கள், அறநெறிப் பாடசாலைகள், பிரிவெனாக்கள், விகாரைகளிள் இயங்கம் சங்கங்கள், விகாரைகளினால் முன்னெடுக்கப்படும் பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்கள் என்பன பற்றிய விபரங்களை பல்வேறு தலைப்புகளின் கீழ் பெற்றுக்கொள்ள முடியும். இத்தகவல்கள் அன்றாடம் தரவேற்றம் செய்யப்படுகின்றன.

எதிர்காலத்தில் விபரங்களை பிரதேச செயலகங்களின் ஊடாக தரவேற்றம் செய்யப்படுவதற்கும் இணையத்தளத்தின் ஊடாக தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கும் தேவையான வசதிகளை திட்டமிடப்பட்டுள்ளது.

### 07.3 விகாரைகள் பற்றிய தகவல்களை தரவேற்றம் செய்தல்

நாட்டின் அனைத்து மாவட்டங்களையும் உள்ளடக்கும் வகையில் அனைத்து நிக்காய பிரிவுகளைச் சேர்ந்த விகாரைகள் பற்றிய தகவல்கள் கணனிமயப்படத்தப்பட்டுள்ளன.

## விகாரைகள், அறநெறிப் பாடசாலைகள் மற்றும் பிக்குமார்கள் பற்றிய கணக்கெடுப்பு

அனைத்து மாவட்டங்களையும் உள்ளடக்கி அனைத்து நிக்காய பிரிவுகளுக்கும் விகாரைகள் பற்றிய தகவல்கள் தரவேற்றம் செய்யப்படுகின்றன.

| மாவட்டம் | பதிவு செய்யப்பட்ட விகாரைகளின் எண்ணிக்கை | விண்ணப்பிக்கப்பட்ட விகாரைகளின் எண்ணிக்கை | விண்ணப்பம் சமர்ப்பிக்கப்படாத விகாரைகளின் எண்ணிக்கை | மாவட்டங்களின் எண்ணிக்கை | இயங்கும் அறநெறிப் பாடசாலைகள் | மொத்த ஆசிரியர்கள் | மாணவர்கள் |
|---|---|---|---|---|---|---|---|
| கொழும்பு | 762 | 96 | 25 | 883 | 662 | 11256 | 220979 |
| கம்பஹா | 666 | 150 | 22 | 838 | 759 | 11425 | 233907 |
| களுத்துறை | 540 | 136 | 16 | 692 | 587 | 8213 | 152473 |
| காலி | 735 | 89 | 20 | 844 | 674 | 8878 | 148418 |
| மாத்தறை | 516 | 104 | 12 | 632 | 539 | 7134 | 125318 |
| அம்பாந்தோட்டை | 419 | 88 | 29 | 536 | 433 | 5297 | 94871 |
| கண்டி | 809 | 191 | 65 | 1065 | 857 | 10552 | 171957 |
| மாத்தளை | 328 | 97 | 25 | 450 | 386 | 3895 | 62917 |
| நுவரெலியா | 263 | 39 | 18 | 320 | 277 | 2823 | 44897 |
| குருநாகல் | 1194 | 321 | 96 | 1611 | 1233 | 13497 | 216913 |
| புத்தளம் | 285 | 52 | 8 | 345 | 299 | 3177 | 55673 |
| அநுராதபுரம் | 689 | 170 | 54 | 913 | 747 | 7591 | 131552 |
| அம்பாறை | 153 | 43 | 4 | 200 | 190 | 2338 | 42284 |
| பொலன்னறுவை | 259 | 50 | 7 | 316 | 293 | 3474 | 63919 |
| திருகோணமலை | 116 | 22 | 11 | 149 | 96 | 1161 | 18135 |
| பதுளை | 368 | 115 | 16 | 499 | 481 | 5506 | 95603 |
| மொனராகலை | 291 | 71 | 13 | 375 | 317 | 3821 | 67563 |
| வவுனியா | 27 | 2 | 1 | 30 | 21 | 233 | 3392 |
| இரத்தினபுரி | 535 | 179 | 20 | 734 | 655 | 7746 | 134819 |
| கேகாலை | 590 | 128 | 39 | 757 | 598 | 7192 | 103667 |
| மன்னார் | 5 |  | 4 | 9 | 0 | 0 | 0 |
| யாழ்ப்பாணம் | 6 | 0 | 3 | 9 | 0 | 0 | 0 |
| கிளிநொச்சி | 1 | 0 | 0 | 1 | 0 | 0 | 0 |
| முல்லைத்தீவு | 12 | 2 |  | 14 | 12 | 147 | 1844 |
| மட்டக்களப்பு | 16 | 1 | 0 | 17 | 0 | 0 | 0 |
| மொத்தம் | 9585 | 2146 | 508 | 12239 | 10116 | 125356 | 2191101 |

**வரைபு 07.2 – 2018/12/31 ஆம் திகதிக்க இலங்கையிலுள்ள விகாரைகள் மற்றும் அறநெறிப் பாடசாலைகள் பற்றிய தகவல்கள்**

## 07.4 பாளி மொழி மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டம்

அறநெறிப் பாடசாலைகளில் பாளி மொழியறிவு கொண்ட ஆசிரியர்களுக்கான குறைபாட்டினை நிவர்த்தி செய்யும் பொருட்டு இந்நிகழ்ச்சித் திட்டமானது வருடாந்தம் நடாத்தப்படுகின்றது. இதன் கீழ் அறநெறிப் பாடசாலை ஆசிரியருக்கு பாளி மொழியறிவினைப் பெற்றுக் கொடுப்பதன் மூலம் அவரைப் பாளி மொழியைக் கற்பிப்பதற்கான செயற்பாட்டில் ஈடுபடுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. இதற்கு மேலதிகமாக அவர்களை திரிபீடகத்தை பற்றி ஆராய்வதற்கான சந்தர்ப்பத்தினை ஏற்படுத்துவதும் எமது நோக்கமாகும்.

பாளி மொழி விற்பன்னர்களைக் கொண்டு தயாரிக்கப்பட்ட பாடத் திட்டங்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட நூல்களை கற்கைநெறியை மேற்கொள்பவர்களுக்கு வழங்கி நாட்டிலுள்ள 17 மாவட்டங்களில் தெரிவு செய்யப்பட்ட 17 மத்திய நிலையங்களில் கற்கைநெறியானது வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டு பரீட்சை நடாத்தப்பட்டது.

## 07.5 பிக்குமார்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்

சாமனேர பிக்குமார்களின் சிந்தனைத் திறனை விருத்தி செய்யும் முகமாக ஒழுக்க சீலரான புகழ் பெற்ற பிக்குமார்களின் பங்களிப்புடன் மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டமானது மேற்கொள்ளப்படுகின்றது. வதிவிடப் பயிற்சியாக மூன்று நாட்களாக இடம்பெறும் இப்பயிற்சியின் போது சம்பிரதாய பூர்வமாக பிரித்ஓதுதல், தர்ம போதனைப் பயற்சி, தியானப் பயிற்சி மற்றும் சாசனப் பழக்க வழக்கங்களை போதித்தல் போன்ற பிக்கு ஒருவருக்குத் தேவையான அறிவு மற்றும் பயிற்சி போன்றன பெற்றுக்கொடுக்கப்படுகின்றது. 2018 இல் அரச வெசாக் உற்சவத்துடன் இணைந்ததாக குருநாகல் மாவட்டத்தின் ஶ்ரீ சுமங்கல பிரிவெனாவில் பிக்கமாரகளக்கான பயிற்சி நிகழ்வு இடம்பெற்றது.


## 07.6 ஊடக செயற்பாடுகள்

திணைக்களத்தின் பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்கள் பற்றி ஊடகங்களுக்கு தகவல்களைப் பெற்றுக்கொடுத்தல், ஊடக சந்திப்புகளை ஒழுங்க செய்தல் மற்றும் பத்திரிகைகள், நூல்களுக்கு தேவையான பௌத்த மத ஆணையாளர் நாயகத்தின் வாழ்த்துச் செய்திகளை தயாரித்தல் போன்றன இதன்போது மேற்கொள்ளப்படுகின்றன.

## 07.7 பத்திரிகை செய்திகள்

அன்றாட நாளிதழ்களில் வெளியாகும் செய்திகள், புத்த தர்மத்தை இழிவுபடுத்தும் செய்திகள், மற்றும் பிக்குமார்கள் தொடர்பான பிரச்சினைகளை தீர்ப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் போன்ற பணிகள் இதன்போது முன்னெடுக்கப்படுகின்றன.

# கணக்கியல் பிரிவு


பிரதான கணக்காளர்
கணக்காளர்
பிரிவுப் பொறுப்பாளர்
அபிவிருத்தி உத்தியோகத்தர் 03
முகாமைத்துவ உதவியாளர் 06
அலுவலக உதவியாளர்
2

| **CATEGORY : ADVANCE ACCOUNTS (2018)** | | | | | | | | **Form : C** | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | Financial Performance (Rs. In '000)<br>Rs. 000 | | | | | Physical Performance | | | | |
| Description | Current Year | | Previous Year Actual | Variations Over | | Output(Service/Goods) | | Current Year's output | | Previous Years Output Actual |
| | Prescribed | Actual | | Prescribed | Previous Year Actual | Type/class | Measure | Targeted | Actual | |
| **Type**: ……Advance Account | | | | | | Distress Loans | Applicant | | 20,875 | 18,668 |
| | | | | | | Property Loans | Applicant | | - | - |
| **Account Title and No.**: Public Officers Advance Account No 20101 | | | | | | Vehicle Loans | Applicant | | - | - |
| | | | | | | Indebt Loans | Applicant | | - | - |
| | | | | | | Bicycle Loans | Applicant | | - | - |
| - Maximum Expenditure Limit | 35,000 | 17,456 | 30,671 | (17,456) | (13,215) | Festival Loans | Applicant | | 5,386 | 5,270 |
| Minimum Receipt Limit | 18,500 | 19,064 | 18,675 | 564 | 389 | Special Loans | Applicant | | 392 | 416 |
| Maximum Debit Limit | 68,000 | 58,475 | 46,868 | 9,525 | 11,607 | Special Loan Advances | Applicant | | 4,018 | - |
| Maximum Liability | | | | | | | | | | |

| CATEGORY : APPROPRIATION ACCOUNT(2018) | | | | | | Form : B | |
|---|---|---|---|---|---|---|---|
| | Financial Performance (Rs. In '000) | | | | | Physical Performance | |
| Description | Current Year | | Previous Year | Variations Over Previous Year | | Output(Service/Goods) | |
| | Budgeted | Actual | Actual | Budgetd | Year Actual | Type/class | Measure |
| **Programme Title and No** .<br>02 Development Activities<br>**Project Title and No**. :<br>02. Uflifment of Buddhist Activities | | | | | | | |
| <u>**Expenditure :**</u> | | | | | | | |
| **Recurrent Expenditure** | | | | | | | |
| * Personal Emoluments | 328,216 | 317,448 | 314,350 | 10,768 | 2,343 | Personal Emoluments | No.of Employees |
| * Other Recurrent | 960,320 | 815,431 | 748,739 | 144,889 | 7,386 | | |
| Total | 1,288,536 | 1,132,879 | 1,063,089 | 155,657 | 9,729 | | |
| **Capital Expenditure** | | | | | | | |
| * Facilitation of Dhamma School | 25,000 | 24,237 | 18,335 | 763 | 5,902 | | |
| * Facilitation of Sasanarakshaka Mandala | 3,000 | 1,815 | 2,908 | 1,185 | (1,093) | | |
| * Facilitation of Silmatha Arama | 8,000 | 7,350 | 4,851 | 650 | 2,499 | | |
| * Dhamma School Teacher's Training & DhahamSarasaviya Programmer | 11,500 | 10,084 | 11,386 | 1,416 | (1,302) | | |
| Total | 47,500 | 43,486 | 37,480 | 4,014 | 6,006 | | |
| **Total Expenditure** | **1,336,036** | **1,176,365** | **1,100,569** | **159,671** | **15,735** | | |

# உள்ளக கணக்காய்வு பிரிவு

சம்புத்த சாசனத்தின் நிலையுறுதி மற்றும் மேம்பாட்டின் பொருட்டு 1931இன் 19ம் இலக்க விகாரைகள் அறக்கட்டளை நிலையங்கள் கட்டளைச் சட்டத்தின் மூலம் பௌத்த மத அலுவல்கள் ஆணையாளர் நாயகத்திற்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை நிறைவேற்றுவதற்கு உதவி புரிதல் இப்பிரிவின் பணியாகும்.
அதற்கமைய 2013.07.01ஆம் திகதி பௌத்த மத அலுவல்கள் திணைக்களத்தின் உள்ளக கணக்காய்வு பிரிவானது நிறுவப்பட்டது.

**நோக்கம்:-**

- 1931 இன் 19 அம் இலக்க விகாரைகள் மற்றும் அறக்கட்டளை நிலையங்கள் தொடர்பான கட்டளைச் சட்டத்தின் 4(1) பிரகாரம் செயற்படுதல்
- திணைக்களத்தின் அனைத்து கணக்குகள் தொடர்பிலும் பரிசீலனை செய்தல்.
- உள்ளக நிர்வாக கட்டமைப்பை பலப்படுத்துவதற்கு உதவுதல்.
- கணக்கியல் நடவடிக்கைகளை சிறப்பாக மேற்கொள்வதற்கு உதவுதல்.
- சொத்துக்களின் சிறந்த பாவனைக்கு உதவி புரிதல்.
- திணைக்களத்தின் இலக்கினை அடைவதற்கு துணைபுரிதல்.

**உள்ளக கணக்காய்வாளர் பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட விஷேட செயற்திட்டங்கள்.**

1. விகாரைகள் அறக்கட்டளை நிலையங்கள் சட்டமூலத்தின் விதிமுறைகளுக்கு அமைய வழிபாட்டு தலங்கள் பின்பற்ற வேண்டிய வங்கிக்கணக்குகளை அறிமுகம் செய்து அவற்றின் நிர்வாக கட்டமைப்பை பலப்படுத்துதல்.
2. சட்டமூலத்தின் 4(1) அத்தியாயத்தின் பிரகாரம் நிர்வகிக்கப்படும் வழிபாட்டு தலங்களின் வருமாணங்களை கணக்காய்வு செய்தல் மற்றும் அவற்றுக்கு தேவையான வழிகாட்டல்களை வழங்குதல்.
3. கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்களின் கூட்டங்களை நடாத்துதல்.
4. திணைக்களத்தின் ஏனைய பிரிவுகளால் ஒழுங்கு செய்யப்படும் நிகழ்வுகளுக்கு தேவையான ஒத்துழைப்பையும் பங்களிப்பையும் பெற்றுக்கொடுத்தல்.
5. திணைக்களத்தில் இடம்பெறும் விஷேட பணிகளுக்கு தேவையான ஒத்துழைப்பை பெற்றுக்கொடுத்தல்.

**உள்ளக கணக்காய்வு பிரிவினால் பரிசீலிக்கப்படுபவை**

| அலுவலகம் | 4(1) இன் கீழ் நிர்வகிக்கப்படும் விகாரைகள் | 4(1) இன் கீழ் நிர்வகிக்கப்படும் தேவஸ்தானங்கள் | **மொத்தம்** |
|---|---|---|---|
| பிரதான அலுவலகம | 116 | 08 | **124** |
| இரத்தினபுரி பிராந்திய அலுவலகம் | 30 | 09 | **39** |
| கண்டி பிராந்திய அலுவலகம் | 71 | 20 | **91** |
| **மொத்தம்** | **217** | **37** | **254** |

**பிரதான அலுவலகத்தினால் பரிசீலிக்கப்படுபவை**

| மாவட்டம் | 4(1) இன் கீழ் நிர்வகிக்கப்படும் விகாரைகள் | 4(1) இன் கீழ் நிர்வகிக்கப்படும் தேவஸ்தானங்கள் |
|---|---|---|
| கொழும்பு | 08 | - |
| கம்பஹா | 14 | - |
| களுத்துறை | 07 | - |
| காலி | 07 | 01 |
| மாத்தறை | 20 | 01 |
| குருநாகல் | 43 | 06 |
| அம்பாந்தோட்டை | 13 | - |
| அநுராதபுரம் | 04 | - |
| **மொத்தம்** | **116** | **08** |

**கண்டி பிராந்திய அலுவலகத்தினால் பரிசீலிக்கப்படுபவை**

| மாவட்டம் | 4(1) இன் கீழ் நிர்வகிக்கப்படும் விகாரைகள் | 4(1) இன் கீழ் நிர்வகிக்கப்படும் தேவஸ்தானங்கள் |
|---|---|---|
| கண்டி | 42 | 13 |
| மாத்தளை | 07 | 01 |
| கேகாலை | 17 | 03 |
| நுவரெலியா | 03 | 02 |
| பதுளை | 02 | 01 |
| **மொத்தம** | **71** | **20** |

**இரத்தினபுரி பிராந்திய அலுவலகத்தினால் பரிசீலிக்கப்படுபவை**

| மாவட்டம் | 4(1) இன் கீழ் நிர்வகிக்கப்படும் விகாரைகள் | 4(1) இன் கீழ் நிர்வகிக்கப்படும் தேவஸ்தானங்கள் |
|---|---|---|
| இரத்தினபுரி | 16 | 04 |
| மொனராகலை | 09 | 02 |
| பதுளை | 05 | 03 |
| **மொத்தம்** | 30 | 09 |

# பௌத்த மத அலுவல்கள் திணைக்களத்தின் பிராந்திய அலுவலகம் - இரத்தினபுரி

**நிர்வாக பிரதேசம்**

இரத்தினபுரி, மொனராகலை, பதுளை ஆகிய மாவட்டங்களில் 1931 இன் 19 ஆம் இலக்க விகாரைகள் அறக்கட்டளை நிலையங்கள் கட்டளைச் சட்டத்தின் (4)1 மற்றும்(4)2 அத்தியாயங்களின் கீழ் நிர்வகிக்கப்படும் தேவஸ்தானங்கள் உள்ளடங்கும்.

| மாவட்டம் | 4 (1) கீழ் நிர்வகிக்கப்படும் தேவஸ்தானங்கள் | 4 (2) கீழ் நிர்வகிக்கப்படும் தேவஸ்தானங்கள |
|---|---|---|
| **இரத்தினபுரி** | 20 | 548 |
| **மொனராகலை** | 11 | 362 |
| **பதுளை** | 08 | 391 |
| **மொத்தம்** | **39** | **1301** |

இந்த தேவஸ்தானங்கள் தொடர்பான அனைத்துப் பணிகளும் 1931 இன் 19 ஆம் இலக்க விகாரைகள் அறக்கட்டளை நிலையங்கள் கட்டளைச் சட்டத்தின் விதிமுறைகளுக்கமைய இரத்தினபுரி மாவட்ட செயலகத்தினால் மேற்கொள்ளப்படுகின்றன.

- விகாரைகளின் பொறுப்பாளர்கள், பஸ்நாயக்க நிலமேக்களை நியமித்தல்.
- தேவஸதானங்களின் சொத்துக்களை பொறுப்பாளரகளிடம் ஒப்படைத்தல்.
- விகாரைகள், தேவஸ்தானங்களுக்குச் சொந்தமான காணிகளை குத்தகைக்கு வழங்குதல்.
- வருடாந்த வரவு செலவு கணக்குகளைப் பரிசீலித்தல்.
- விகாரைகள் தொடர்பான பிரச்சினைகளைத் தீர்த்தல்.
- கதிர்காமம் முருகன் கோயில் உற்சவத்திற்கான ஒத்துழைப்பினை வழங்குதல்.
- உண்டியல் மற்றும் காணிப் பிரச்சினைகளைத் தீர்த்தல்.
- மரங்களை வெட்டுவதற்கும் போக்குவரத்திற்கும் தேவையான சிபாரிசினைப் பெற்றுக்கொடுத்தல்.
- மாணிக்கக் கல் அகழ்விற்கான அனுமதிப் பத்திரங்களை வழங்குதல்.
- அமரத்துவம் எய்திய பிக்குமார்களின் வங்கிக் கணக்குகள் தொடர்பான பணிகள்.
- முறைப்பாடுகள் தொடர்பான பணிகள்

| தொ.இல | பணிகள் | மாவட்டம் | | | |
|---|---|---|---|---|---|
| | | இரத்தினபுரி | பதுளை | மொனராகலை | மொத்தம் |
| **01** | பொறுப்பாளர்களை நியமித்தல் | 06 | - | 02 | 08 |
| **02** | காணிகளை குத்தகைக்கு வழங்குதல். | 190 | 300 | 110 | 600 |
| **03** | குத்தகைப் பணம் சீர்திருத்தம் | 45 | 370 | 58 | 473 |
| **04** | மரங்களை வெட்டுவதற்கும் போக்குவரத்திற்கும் தேவையான சிபாரிசினைப் பெற்றுக்கொடுத்தல் | 190 | - | 220 | 410 |
| **05** | அமரத்துவம் எய்திய பிக்குமார்களின் வங்கிக் கணக்குகள் தொடர்பான பணிகள் | **30** | **20** | **07** | **57** |
| **06** | உறுதிச் சீட்டுக்களுக்கான அனுமதிகளை வழங்குதல் | **03** | **-** | **02** | **05** |
| **07** | தண்டப் பணம் மற்றும் வட்டிப் பணத்தினை விடுவித்தல் | **03** | **02** | **02** | **07** |
| **08** | விகாரைக் காணிகள் தொடர்பான பிரச்சினைகளைத் தீர்த்தல் | **105** | **105** | **95** | **305** |
| **09** | மாணிக்கக் கல் அகழ்விற்கான அனுமதிப் பத்திரங்களை வழங்குதல் | **201** | **20** | **05** | **226** |
| **10** | மாணிக்கக் கல் அகழ்விற்காக வழங்கப்பட்டுள்ள அனுமதிப் பத்திரங்களின் காலத்தை நீடித்தல் | **150** | - | **03** | **153** |

உத்தேச வரவு செலவுத்திட்ட அறிக்கை மற்றும் அரையாண்டு வரவு செலவுத்திட்ட அறிக்கையை உரிய நேரத்திற்கு அனுப்பி வைக்காத மற்றும் தாமதமாக அனுப்பும் பொறுப்பாளர்கள் மற்றும் பஸ்நாயக்க நிலமைகளுக்கான ஞாபகமூட்டல் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன. இந்த அலுவலகத்தினால் மேற்க் கொள்ளப்படும் நிலைய பரிசீலனைகள் மூலம் வழிபாட்டுத்தலங்களில் நிலவும் பிரச்சனைகளுக்கு தீர்வுகளை பெற்றுக்கொடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. குத்தகை தாரர்கள் மற்றும் பொருப்பாளர்களுடன் பேச்சு வார்த்தைகளை நடாத்தி குத்தகை பணத்தை அறவிடுவதன் பொருட்டு பல விசேட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. விசேடமாக பதுளை கண்ணகி அம்மன் தேவஸ்தானத்திற்குரிய காணிகளில் சட்ட விரோதமாக குடியேறியுள்ள குடியேற்றகாரர்களிடமிருந்து நீண்ட கால குத்தகை திட்டத்தின் கீழ் குத்தகை பணத்தை பெற்றுக் கொள்ளுவதற்கான நடவடிக்கைகள் இந்த வருடம் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. குத்தகை பணத்தை செலுத்தாது இருத்தல் போன்ற சந்தர்ப்பங்களில் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

அத்துடன் சப்ரகமுவா மகா சமன் தேவஸ்தானத்தின் முன்னால் பஸ்நாயக்க நிலமேயின் பதவிக்காலம் 2018.06.17 ஆம் திகதியுடன் முடிவடைந்ததன் காரணமாக புதிய பஸ்நாயக்க நிலமே ஒருவர் தெரிவு செய்யப்படும் வரை அந்த தேவஸ்தானத்தின் பணிகள் பௌத்த மத அலுவல்கள் ஆணையாளர் நாயகத்தின் கண்காணிப்பின் கீழ் நிர்வகிக்கப்படுகின்றமையினால் அதன் கடமைகளின் போது இரத்தினபுரி பிராந்திய அலுவலகத்தினால் பெரும் பங்களிப்பு செய்யப்படுகின்றது. இக்காலப் பகுதியில் பணிகள் முறையாக மேற்கொள்ளப்பட்டு வந்ததன் காரணமாக சப்பிரகமுவா சமன் தேவஸ்தானத்திற்குரிய SGKX 6551 இலக்கத்தையுடைய வாகனத்தில் மாதாந்த கட்டுப்பணம் செலுத்தி முடிக்கப்பட்டுள்ளது. அத்துடன் ரூ. 4.5 மில்லியன்கள் பெறுமதியான மின்கட்டண நிலவைக் கொடுப்பனவானது ரூ. 0.3 மில்லியன்களாக குறைப்பு செய்யப்பட்டுள்ளது. மிகவும் சேதமடைந்த சப்பிரகமுவா சமன் தேவஸ்தானத்திற்குரிய கூரையை புனரமைப்பு செய்வதற்கு தேவையான உதவிகள் பிராந்திய அலுவலகத்தினால் வழங்கப்பட்டதன் காரணமாக புராதன தன்மையை பாதுகாக்கும் வகையில் கூரையானது மிகவும் அழகாக புனரமைப்பு செய்யப்பட்டுள்ளது.

2018 இல் தேவஸ்தானங்களுக்கு சொந்தமான காணிகளை குத்தகைக்கு வழங்குதல் மற்றும் குத்தகை பணத்தை அறவிடுதல் போன்ற நடவடிக்கைகளில் சிறந்த முன்னேற்றம் ஏற்பட்டது. அத்துடன் 2018 இல் குத்தகை பணத்தை செலுத்துவது தொடர்பில் பல்வேறு நடவடிக்கைகள் செயற்படுத்தப்பட்டன. இந்த அலுவலகத்தின் கோப்புகளை முறையாக பேணுவதற்கும் எளிதில் இனங்காணுவதற்கும் ஏற்ற வகையில் புதிய கோப்பு அட்டைகளை தயாரிக்கும் பணிகள் இவ்வருடம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் தொடர்ந்தும் இச்செயற்பாடுகள் முன்னெடுத்து செல்லப்படுகின்றது.

நீண்ட கால குத்தகை அடிப்படையில் மொனராகலை மாவட்டத்தில் அமைந்துள்ள வத்தேகம ரஜமகா விகாரைக்கு சொந்தமான 2138 ஏக்கர் காணியானது வத்தேகம பிளான்ரேசன் நிறுவனத்திற்கு நீண்ட கால குத்தகை அடிப்படையில் வழங்குவதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதன் காரணமாக நிகழ்காலத்தில் குறித்த பிரதேச மக்களுக்கு பல்வேறு தொழில் வாய்ப்புகள் கிடைக்கப்பெற்றுள்ளன. இக்கருத்திட்டத்திற்கு ஆரம்ப காலத்தில் மக்களால் எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்ட போதிலும், இது தொடர்பில் இடம்பெற்ற பேச்சுவார்த்தைகளில் கலந்து கொண்டு பிரச்சனைகளை முறையாகக் கையாண்டதன் விளைவாக தற்போது இக் கருத்திட்டத்தின் மூலம் தற்போது அப்பிரதேசத்தில் சிறந்த பொருளாதார முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. இங்கு கரும்பு

மற்றும் சோயா, அவரை என்பன பயிரிடப்படுவதன் காரணமாக தேசிய உற்பத்தி துறைக்கு பங்களிப்பு செய்வதற்கான சந்தர்ப்பம் பௌத்த மத அலுவல்கள் திணைக்களத்திற்கும் கிடைக்கப்பெற்றுள்ளது. இதன் மூலம் நாமும் நாட்டின் அபிவிருத்தி செயற்பாட்டின் பங்குதாரராவதற்கான வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

அதே போன்று வத்தேகம ரஜமகா விகாரைக்கு சொந்தமான காணியை நீண்டகால குத்தகை அடிப்படையில் பெற்றுக் கொண்டுள்ள மெலிபன் நிறுவனமானது அக் காணிகளில் சூழலுக்கு பொருத்தமான பயிர்ச்செய்கைகள் மேற்கொள்ளப்படுவதன் காரணமாக மிகவும் பின்தங்கிய பிரதேசமான வத்தேகம பிரதேசத்தில் தற்போது சிறந்த பொருளாதார முன்னேற்றம் காணப்படுகின்றது. இதன் மூலம் வீதிகள் போன்ற அடிப்படை வசதிகள் மேம்படுத்தப்படுவதனால் அப்பிரதேச மக்கள் பொருளாதார ரீதியில் முன்னேற்றமடைவதற்கான வாய்ப்புகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

வத்தேகம மற்றும் முப்பனே ரஜமகா விகாரைகளுக்கு சொந்தமான காணிகளை சட்ட விரோதமாக உபயோகிப்பதை நிறுத்தி, அவற்றை நீண்ட கால குத்தகை அடிப்படையில் மக்களுக்கு உபயோகிக்கும் வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதன் மூலம் விகாரைக்கு சுமார் ரூ. 06 மில்லியன்கள் வரையிலான வருமானத்தை பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருப்பதுடன் விகாரைக்கு சொந்தமான காணிகள் பாதுகாக்கப்படுவதுடன் அபிவிருத்தியும் செய்யப்படுகின்றன.

கதிர்காம முருகன் கோயிலின் செயற்பாடுகள் முறையாகக் கண்காணிக்கப்பட்டதன் மூலம் தற்போது கோயிலுக்கு சொந்தமான யாத்திகர் விடுதியானது புனரமைப்பு செய்யப்பட்டு வருமானத்தை ஈட்டும் நிலைக்கு கொண்டு வரப்பட்டுள்ளது. அத்துடன் கதிர்காமம் முருகன் கோயிலுக்கு சொந்தமான பெருமளவிலான காணிகள் பெலவத்தை சீனி நிறுவனத்திற்கு நீண்டகால குத்தகைக்கு வழங்கப்பட்டதன் மூலம் வருடாந்தம் ரூ. 15 மில்லியன்கள் வருமானத்தைப் பெற்றுக்கொள்ள முடிந்திருப்பதுடன் பெரும் எண்ணிக்கையிலான தொழில் வாய்ப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. அத்துடன் கதிர்காமம் முருகன் கோயிலுக்கு சொந்தமான காணிகளில் கரும்பு பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படுவதன் மூலம் நாட்டின் அபிவிருத்தித்துறைக்கு பங்களிப்புச் செய்யக்கூடியதாகவுள்ளது.

கதிர்காமம் முருகன் கோயிலின் முன்னால் பஸ்நாயக்க நிலமே அவர்களின் பதவியை இடைநிறுத்தி, தற்காலிய பொறுப்பாளர் ஒருவரை நியமித்து, பொருட்கள் கணிப்பீடுகளை மேற்கொள்ளுதல் மற்றும் தற்காலிக பொறுப்பாளரின் பணிகளை மேற்பார்வை செய்து அறிவுரைகள் பெற்றுக்கொடுக்கப்பட்டதுடன் முன்னால் பஸ்நாயக்க நிலமேயின் பதவிக் காலத்திற்குரியதாக கணக்காளர் நாயகம் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படும் பரிசீலனைகளுக்கு தேவையான தகவல்கள் வழங்கப்பட்டன.

சப்பிரகமுவ சமன் தேவஸ்தானம் மற்றும் கதிர்காமம் முருகன் கோயில் பிரச்சனைகள் தொடர்பில் இலஞ்சம் மற்றும் ஊழல்கள் விசாரணை பிரிவினால் மேற் கொள்ளப்படும் விசாரணைகளுக்கு ஆஜராகி அப்பரிசீலனைகளை மேற்கொள்ளுவதற்கு தேவையான ஒத்துழைப்பு வழங்கப்பட்டுள்ளது.

நீண்டகால குத்தகைதாரர்களின் குத்தகை ஒப்பந்த உடன்படிக்கைப் பத்திரத்தை சமர்ப்பித்து வங்கிக்கடன்களைப் பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்புகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டதன் மூலம் தற்போது குத்தகைதாரர்கள் ஒப்பந்த உடன்படிக்கைகளைப் பெற்றுக்கொள்வதில் ஆர்வம் செலுத்தி வருகின்றனர். இவ்வாறு கடன்களைப் பெற்று தொழில் வாய்ப்புகள் ஏற்படுத்தப்படுவதன் மூலம் குத்தகைதாரர்கள் பொருளாதார ரீதியில் முன்னேற்றமடையக் கூடிய சந்தர்ப்பம் ஏற்படுகின்றது.

இவ்வருடம் சப்பிரகமுவா சமன் தேவஸ்தானம், கதிர்காமம் முருகன் கோயில், கிரிவெஹெர ரஜமகா விகாரை உள்ளடங்கலாக வழிபாட்டுத்தலங்களில் உண்டியல் பணக் கணக்காய்வுகள் 40 மேற்கொள்ளப்பட்டுள்ளன.

| தொ.இல. | வழிபாட்டுத் தலங்கள் | வருடாந்த உண்டியல் வருமானம் |
|---|---|---|
| **01** | சப்பிரகமுவா மகா சமன் தேவஸ்தானம் | 20,325,356.29 |
| **02** | கதிர்காமம் முருகன் கோயில் | 00.18178190 |
| **03** | கிரி விகாரை ரஜமகா விகாரை | 30302000.00 |
| **04** | அபினவாராமை விகாரை | 377320.00 |
| **05** | செல்லக் கதிர்காமம் மகாசேனன் ரஜமகா விகாரை | 1374575.00 |
| **06** | கோட்டபோவை முருகன் தேவஸ்தானம் | 296820.00 |
| **07** | பொல்தும்பை மகா சமன் தேவஸ்தானம் | 148330.00 |

2018 இல் சப்பிரகமுவ சமன் தேவஸ்தானத்தினதும், சங்கபால ரஜமகா விகாரையினதும் வியாபார நிலையங்களை ஏலத்தில் விடப்பட்டதன் மூலம் முறையே ரூ.5960.552.72 உம் ரூ.807000.00 உம் வருமானத்தைப் பெற்றுக்கொடுப்பதற்கு திணைக்கள அதிகாரிகளுக்கு முடிந்துள்ளது. சப்பிரகமுவ சமன் தேவஸ்தானத்தின் உண்டியல் வருமானத்திற்கு மேலதிக மாணிக்ககல் அகழ்வு வருமானம் மற்றும் மின்கட்டண வருமானம் என்பவை தொடர்பான கணக்காய்வுகள் 2017 தொடக்கம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் அப்பணிகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இப்பணிகளை மேற்கொள்வதன் ஊடாக பௌத்த மத அலுவல்கள் திணைக்களத்திற்கு தேசிய பொருளாதாரத்திற்கு பங்களிப்பு செய்வதற்கு சந்தர்ப்பம் கிடைத்தமையானது மகிழ்ச்சிக்குரிய விடயமாகும். 2018 இல் அதற்கு முன்னைய வருடங்களை விடவும் பயனுள்ளதாகவும் வினைத்திறன் மிக்கதாகவும் செயற்பட முடிந்தது என்பதையும் இச்சந்தர்ப்பத்தில் ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

**2019 இல் நடைமுறைப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படும் நிகழ்ச்சித்திட்டங்கள்**

1. அலுவலகக் கோப்புகளை முறையாகப் பராமரித்தல்
2. பணிகளை மிகவும் பயனுள்ளதாகவும் மேற்கொள்வதன் பொருட்டு கோப்புகளில் உள்ளடக்கப்பட்டுள்ள அனைத்து தகவல்களையும் கணனிமயப்படுத்தல் (அதற்கான அடிப்படை வசதிகளைப் பெற்றுக் கொள்ளல்)
3. பௌத்த விகாரைகள் மற்றும் அறக்கட்டளை நிலையங்கள் தொடபான கட்டளைச்சட்டத்தின் 4(l) அத்தியாயத்தின் கீழ் இயங்கும் இரத்தினபுரி பிராந்திய அலுவலகத்தின் நிர்வாக எல்லைக்கு உட்பட்ட வழிபாட்டுத்தலங்களை தொடர்ச்சியா மேற்பார்வை செய்வதன் மூலம்

   I. நிதி தொடர்பான பணிகளை முறையாக நிர்வகித்தல்.
   II. சிறந்த நிர்வாக முறைமையை ஏற்படுத்துதல்.
   III. சேவைகளை இலகுவாக்குதல்.
   IV. வழிபாட்டுத்தலங்களின் வருமானங்களை அதிகரித்தல்.
   V. வுழிபாட்டுத்தலங்களில் நிலவும் பிரச்சனைகளை தீர்த்துவைத்தல்.
   VI. வழிபாட்டுத்தலங்களின் நிதிக் கொள்கைகள் தொடர்பில் பொது மக்களுக்கு தெளிவுபடுத்துதல்.

4. வழிபாட்டுத்தலங்களின் உத்தேச வரவு செலவுத்திட்டங்களுக்கு அமைய உண்மை வருமானம் மற்றும் செலவு விபரங்களை ஒப்பீடு செய்து அதன் உண்மை நிலையை கண்காணிப்பு செய்வதன் ஊடாக வழிபாட்டுத்தலங்களின் அபிவிருத்திக்கு தேவையான அறிவரைகளை பெற்றுக்கொடுத்தல்
5. அறிவுரைப் பத்திரங்களை தயாரித்து பொறுப்பாளர் பதவி வகிப்பவர்களை தெளிவுபடுத்தும் நிகழ்ச்சித்திட்டம் ஒன்றை ஒழுங்கு செய்தல்.


6. இரத்தினபுரி பிராந்திய அலுவலகத்தினால் 4(i) கட்டளைச் சட்டத்தின் கீழ் நிர்வகிக்கப்படும் வழிபாட்டுத்தலங்களுக்குச் சொந்தமான காணிகள் தொடர்பான கணக்கெடுப்பு ஒன்றினை மேற்கொள்வதன் மூலம்

   i. சொந்தமான காணிகள் தொடர்பான கணக்கெடுப்பு ஒன்றினை பெற்றுக் கொள்ளல்
   ii. முறையற்ற குத்தகை வழங்கல்களை நிறுத்தி முறையான குத்தகை முறை ஒன்றினை ஏற்படுத்துதல்
   iii. இதன் மூலம் வழிபாட்டுத் தலங்களின் வருமானங்களை மேம்படுத்தல் மற்றும் கணக்கெடுப்புகளை சரியாக மேற்கொள்ளுதல்
   iv. பணிகளை இலகுவாக்குதல் மற்றும் தாமதங்களை குறைத்துக் கொள்ளல்

7. வழிபாட்டுத் தலங்களின் காணிகளை உபயோகிப்பவர்களை தெளிவுபடுத்தி தேவையற்ற தாமதங்களை தவிர்த்து குத்தகை பணத்தை உரிய காலப்பகுதியில் செலுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்
8. திணைக்களத்தின் பல்வேறு பணிகளை நிறைவேற்றுவதில் ஏற்படும் பிரச்சனைகள் தொடர்பில் பேச்சு வார்த்தைகளை நடாத்துதல்

எதிர்வரும் காலங்களிலும் இந்த நிறுவனங்களுடன் தொடர்புகளை ஏற்படுத்துவதன் மூலம் நாட்டின் பொருளாதாரத்திற்கும் அபிவிருத்திக்கும் பங்களிப்பு செய்வதுடன் வழிபாட்டுத் தலங்களுக்கு சொந்தமான உடைமைகளை பாதுகாத்து அபிவிருத்தி செய்யக்கூடிய வகையில் பணிகளை மேற்கொள்ளுவதற்கு பௌத்த மத அலுவல்கள் திணைக்களத்தின் இரத்தினபுரி பிராந்திய அலுவலகம் ஆயத்தமாக உள்ளது என்பதனை மிகவும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றேன்.

# பௌத்த மத அலுவல்கள் திணைக்களத்தின் பிராந்திய அலுவலகம் - கண்டி



**நிர்வாகப் பிரதேசம் -**

கண்டி, மாத்தளை, கேகாலை, நுவரெலியா மாவட்டங்களில் அமைந்துள்ளதும் மற்றும் முதியங்கணை ரஜமகா விகாரை, மஹியங்கணை ரஜமகா விகாரை, மஹியங்கணை சமன் தேவஸ்தானம் உள்ளடங்கலான பௌத்த விகாரைகள் அறக்கட்டளை நிலையங்கள் தொடர்பிலான கட்டளைச்சட்டத்தின் 4(1) மற்றும் 4(2) அத்தியாயங்களின் கீழ் நிர்வகிக்கப்படும் விகாரைகள் மற்றும் தேவஸ்தானங்கள் ஆகும்.

| மாவட்டம் | 4 (1) கீழ் நிர்வகிக்கப்படும் தேவஸ்தானங்கள் | 4 (2) கீழ் நிர்வகிக்கப்படும் தேவஸ்தானங்கள் | 4(1) இன் கீழ் பரிபாலிக்கப்படாத வழிபாட்டுத் தலங்கள் |
|---|---|---|---|
| கண்டி | 42 | 13 | 1051 |
| மாத்தளை | 07 | 01 | 459 |
| கேகாலை | 17 | 03 | 749 |
| நுவரெலியா | 03 | 02 | 321 |
| பதுளை | 02 | 01 | - |
| மொத்தம் | 71 | 20 | 2580 |

இவ்வழிபாட்டுத் தலங்கள் தொடர்பான அனைத்து பணிகளும் 1931 இல் 19 ஆம் இலக்கத்தைக் கொண்ட பௌத்த விகாரைகள் அறக்கட்டளை நிலையங்கள் கட்டளைச் சட்டத்தின் விதிகளுக்கமைய இவ்வலுவலகத்தினால் மேற்கொள்ளப்படுகின்றன.

- ஸ்ரீ தலதா மாளிகை மற்றும் அதனை சூழவுள்ள நான்கு பிரதான தேவஸ்தானங்களுக்கான தியவடணநிலமே மற்றும் பஸ்நாயக்கநிலமே பதவிகளுக்கான நபர்களை தெரிவு செய்வதற்கான வாக்கெடுப்புகளை நடாத்துதல்
- நிர்வகிக்கப்படும் விகாரைகள் மற்றும் தேவஸ்தானங்களுக்கான பொறுப்பாளர்களை நியமித்தல்
- பொறுப்பாளர்களுக்கான கட்டுப்பணத்தை வைப்பு செய்தல் மற்றும் விடுவித்தல்
- வழிபாட்டுத் தலங்களின் உடைமைகளை அதன் பொறுப்பாளர்களுக்கு கையளித்தல்
- விகாரைகள் மற்றும் வழிபாட்டுத் தலங்களுக்கு சொந்தமான காணிகளை குத்தகைக்கு வழங்குதல்
- பிரவேணி காணிகளின் உரிமை தொடர்பான பதிவேடு ஒன்றினை பேணுதல்
- வருடாந்த கணக்குகள் பற்றிய அறிக்கைகளைப் பெற்றுக்கொள்ளல், பரிசீலித்தல் மற்றும் நிதியை விடுவித்தல்
- விகாரைகளில் நிலவும் பிரச்சனைகள் தொடர்பில் தீர்வுகளை பெற்றுக்கொடுத்தல்
- ஸ்ரீ தலதா மாளிகையின் பெரஹரா மற்றும் உபசம்பதா சடங்குகளுக்கு தேவையான உதவிகளை பெற்றுக்கொடுத்தல்.
- பௌத்த அறநெறிப் பாடசாலைகளில் இடம்பெறும் விழாக்கள் மற்றும் ஏனைய பௌத்த சமய விழாக்களில் பங்குபற்றுதலும் தேவையான உதவிகளை பெற்றுக்கொடுத்தலும்.

வழிபாட்டுத் தலங்கள் தொடர்பான பணிகளை முறையாக மேற்கொள்வதன் பொருட்டு 2017 ஐ போன்று 2018 மே மாதம் 18 ஆம் திகதி செங்கடகலை பௌத்த பிராந்திய சபையில் இடம்பெற்ற வழிபாட்டுத் தலங்களின் பொறுப்பாளர்களை தெளிவுபடுத்துவதற்கென ஒழுங்கு செய்யப்பட்ட கருத்தரங்கானது மிகவும் வெற்றிகரமாக நடைபெற்றது. வழிபாட்டுத்தலங்களில் நிலவும்

பிரச்சனைகள் தொடர்பிலான பேச்சுவார்த்தைகளின் போது எமது திணைக்களத்திற்கு தேவையான ஒத்துழைப்புகளை வழங்கும் ஏனைய அரச நிறுவனங்களின் அதிகாரிகளை பங்குபெற செய்தமையானது விசேடமானதொரு அம்சமாகும். அத்துடன் பிரதான உள்ளக கணக்காய்வாளரின் தலைமையில் வழிபாட்டுத்தலங்களின் கணக்குகள் மற்றும் கணக்காய்வு பற்றிய பணிகளை உரிய படிவங்களுக்குமைய குறிப்பிடுவது பற்றிய கருத்தரங்கு ஒன்றும் இடம்பெற்றது.

மேலும் ஏனைய வருடங்களைப் போன்றே வழிபாட்டுத்தலங்களுக்கு விஜயம் மேற்கொண்டு தெளிவுபடுத்தும் நிகழ்வுகளும் முன்னெடுக்கப்பட்டது. உத்தெச வரவு செலவுத்திட்ட அறிக்கைகள் மற்றும் அரையாண்டு வரவுசெலவுத்திட்ட அறிக்கைகளை உரிய காலத்திற்கு சமர்ப்பிக்காத பொறுப்பாளர்களுக்கு அது பற்றிய அறிவித்தல்கள் முன்னைய வருடங்களைப் போன்றே வழங்கப்பட்டது. முன்னரைப் போன்றே இவ்வருடமும் வழிபாட்டுத் தலங்களுக்கு சென்று வரவுசெலவுத்திட்ட அறிக்கைகளை தயாரிப்பது தொடர்பில் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டது. 2018 இல் பெற்றுக்கொள்ளப்பட்ட வரவுசெலவுத்திட்ட அறிக்கைகளின் எண்ணிக்கை 86 ஆக காணப்பட்டதுடன் 2018 இன் முதல் 06 மாத காலப்பகுதியில் 50 அரையாண்டு வரவுசெலவுத்திட்ட அறிக்கைகளும் இரண்டாவது ஆறு மாத காலப்பகுதியில் 27 அரையாண்டு வரவுசெலவுத்திட்ட அறிக்கைகளும் கிடைக்கப்பெற்றுள்ளன

வழிபாட்டுத் தலங்களின் குத்தகை விபரங்கள் தொடர்பிலான பதிவுகள் வெவ்வேறாக பேணப்படுவதுடன் அவற்றின் விபரங்களை கணனிமயப்படுத்தி அன்றாடம் தரவேற்றம் செய்தல் மற்றும் ஐந்து வருடங்களுக்கு ஒருமுறை குத்தகை பெறுமதியில் திருத்தங்களை மேற்கொள்ளுதல் போன்ற பணிகளும் இடம்பெறுகின்றன. தேவஸ்தானங்களின் கடமைகள் தொடர்பிலான பிரவேணி காணிகள் பற்றிய பதிவேட்டினை அறிமுகம் செய்தமையின் விளைவாக அக்காணிகள் பற்றிய சரியான தகவல்களை பெற்றுக்கொள்ள முடிந்நது. அலுவலக கோப்புகளை புதுபிக்கும் பணிகள் இடம்பெற்று வருவதுடன் தற்போது கடமையாற்றும் உத்தியோகத்தர்களின் நன்மை கருதி பல்வேறு வகையிலான நலத்திட்டங்களும் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அதற்கமைய 2017 வருடத்துடன் ஒப்பிடும் போது 2018 இல் எதிர் பார்க்கப்பட்ட வகையில் பெரும்பாலான பணிகளை பிரதான அலுவலகத்தின் வழிகாட்டலின் கீழ் பூர்த்தி செய்ய முடிந்தது என்பதனையும் குறிப்பிட விரும்புகின்றேன். 2018 இல் ஏதேனும் குறைபாடுகள் காணப்படின் அவற்றை நிவர்த்தி செய்து இவ்வருடம் மிகவும் சிறப்பாக கடமையாற்றுவதற்கு சக அதிகாரிகளின் ஒத்துழைப்புடன் உறுதி பூண்டுள்ளோம் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

2018 இல் உண்டியல் வருமானம் பற்றிய விபரங்கள்

| தொ.இல. | வழிபாட்டுத்தலம் | தடவைகள் | வருடத்தினுள் வருமானம் |
|---|---|---|---|
| 01 | தலதா மாளிகை | **49** | **33,997,985.00** |
| 02 | கண்டி விஷ்ணு தேவஸ்தானம் | **04** | **1,340,350.00** |
| 03 | அளுநுவர தெடிமுண்ட தேவஸ்தானம் | **05** | **5,726,850.00** |
| 04 | கண்டி முருகன் தேவஸ்தானம் | **11** | **2,835,140.00** |
| 05 | கண்டி கண்ணகி தேவஸ்தானம் | **11** | **4,116,689.00** |
| 06 | தொடன்வலை நாத தேவஸ்தானம் | **05** | **627,169.00** |
| 07 | அம்பக்கை முருகன் தேவஸ்தானம் | **03** | **784,265.00** |
| 08 | கண்டி நாத தேவஸ்தானம் | **01** | **246,650.00** |
| 09 | ரங்கிரி தம்புள்ளை ரஜமஹா விஹாரை | **02** | **2,787,117.00** |
| 10 | கெடம்பே ராஜோபவனாராமை | **11** | **4,849,660.00** |
| 11 | முதியங்கனை ரஜமஹா விஹாரை | **02** | **1,080,610.00** |
| 12 | மஹியங்கனை ரஜமஹா விஹாரை | **02** | **446,077.00** |
| 13 | மஹியங்கனை சமன் தேவஸ்தானம் | **03** | **2,662,880.00** |
| 14 | மாத்தளை அளுவிகாரை | **02** | **269,527.00** |
| 15 | ஹங்குரன்கெத்த விஷ்ணு தேவஸ்தானம் | **01** | **275,738.00** |
| 16 | மெதகொட கண்ணகி அம்மன் தேவஸ்தானம் | **01** | **154,009.00** |
| 17 | லங்காதிலக்கை விஷ்ணு தேவஸ்தானம் | **01** | **278,840.00** |
| 18 | கடொலாதெனிய விஷ்ணு தேவஸ்தானம் | **01** | **37,317.00** |
| | மொத்தம் | **115** | **62,516,873.00** |

**2018.01.01 -2018.12.31 வரையில் விசாரணை செய்யப்படும் வழக்குகள்**

| தொ.இல. | வழக்கு இல. | நீதிமன்றம் | உரிய வழிபாட்டுத்தலம் |
|---|---|---|---|
| **01** | **DLM 000982/11** | கண்டி மாவட்ட நீதிமன்றம் | சுதுகும்பொலை ரஜமகா விகாரை |
| **02** | **20381/L** | கண்டி மாவட்ட நீதிமன்றம் | தலுக்கொல்லை ரஜமகா விகாரை |
| **03** | **L 21455** | கண்டி மாவட்ட நீதிமன்றம் | கங்காராம விகாரை |
| **04** | **DLM 1306/12** | கண்டி மாவட்ட நீதிமன்றம் | திரீ சிங்கள சீமாராமய |
| **05** | **DLM 00048/14** | கண்டி மாவட்ட நீதிமன்றம் | அலவத்துகொடை சந்தகிரி விகாரை |
| **06** | **P 14891** | கண்டி மாவட்ட நீதிமன்றம் | மீகம்மன ரஜமகா விகாரை |
| **07** | **L 17925** | கண்டி மாவட்ட நீதிமன்றம் | தலுகொல்லை ரஜமகா விகாரை |
| **08** | **DLM 125/17** | கண்டி மாவட்ட நீதிமன்றம் | இல்லதொர ரஜமகா விகாரை |
| **09** | **L/ 25984 /L** | அவிசாவலை மாவட்ட நீதிமன்றம் | பல்லேகம கண்ணகி தேவஸ்தானம் |
| **10** | **M/ 24342** | அவிசாவலை மாவட்ட நீதிமன்றம் | பல்லேகம கண்ணகி தேவஸ்தானம் |

**2018.12.31 ஆம் திகதிக்கு முடிவடைந்த வழக்குகள்**

| தொ.இல. | வழக்கு இல. | நீதிமன்றம் | உரிய வழிபாட்டுத்தலம் |
|---|---|---|---|
| 01 | **X 212** | ஹட்டன் மாவட்ட நீதிமன்றம் | ஸ்ரீ மெத்தாராம விகாரை |

01. விநியோகிக்கப்பட்டுள்ள குத்தகை விண்ணப்பப்படிவங்களின் எண்ணிக்கை - 934
02. பூர்த்தி செய்யப்பட்டுள்ள குத்தகை விண்ணப்பப்படிவங்களின் எண்ணிக்கை - 235
03. முதிப்பீட்டின் பொருட்டு அனுப்பப்பட்டுள்ள கடிதங்களின் எண்ணிக்கை - 180
04. நிலையப் பரிசீலனைகளின் எண்ணிக்கை - 51
05. அலுவலக கணனிகளின் எண்ணிக்கை - 77
06. விகாராதிபதி பதவிகளை உறுதிப்படுத்தும் கடிதங்கள் - 06
07. நியமிக்கப்பட்ட பொறுப்பாளர்களின் எண்ணிக்கை - 12
08. நியமிக்கப்பட்ட பஸ்நாயக்க நிலமேக்களின் எண்ணிக்கை - -
09. பொருட்களை ஒப்படைத்தல் - 06
10. நிதி விடுவிப்புகள் - 43
11. மரம் வெட்டுதல் - 133
12. சிரமதானங்கள் - 04
13. உண்டியல் எண்ணதல்கள் - 115
14. விசாரணை செய்யப்படும் வழக்குகள் - 10
15. 2018.12.31 ஆம் திகதிக்கு முடிவடைந்த வழக்குகள் - 01